விலை ரூ. 20/=


# ஈழநாடு
Eelanadu






வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 08.03.2021 திங்கட்கிழமை | இதழ் : 98 | பக்கங்கள் : 16


# ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இன்று சமர்ப்பிக்கப்படுகிறது திருத்தப்பட்ட நகல்!

**22 இல் வாக்கெடுப்பு!! இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா நடுநிலை?**

ஜெனிவா, மார்ச் 08

இலங்கை குறித்த இணைத் தலைமை நாடுகளால் தயாரிக்கப்பட்ட பிரேரணையின் திருத்தப்பட்ட நகல் இன்று திங்கட்கிழமை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்படவுள்ளது. உத்தியோகப்பற்றற்ற கலந்துரையாடலுக்காகவே இந்த திருத்தப்பட்ட நகல் யோசனைகள் சமர்ப்பிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

02



**06**

விஷ பாம்புகளையும் காப்பாற்றும் மாணவி!



**09**

போராட்டத்தில் தோன்றி கொண்டாட்டத்தில் தொடர்கிற கதை



**11**

12 வருடங்களாகியும் கொலைக்கு நீதி கிடைக்கவில்லை



**14**

ஈஸ்டர் தின தாக்குதல் நன்கு திட்டமிடப்பட்ட மனிதப் படுகொலை

## 500 கடந்தது கொரோனா பலி!

கொழும்பு, மார்ச் 08

கொரோனா தொற்றால் நேற்று 5 பேர் உயிரிழந்தனர். இதனால் நாட்டில் தொற்றால் உயிரிழந்த

02

## சர்வதேச நீதிமன்றில் இலங்கையை நிறுத்த பொ. - பொ. பேரணி இயக்கம் கோரிக்கை!

யாழ்ப்பாணம், மார்ச் 08

சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை பாரப்படுத்துவதை பூச்சிய வரைவுத் தீர்மானத்தில் உள்ளடக்க வேண்டும் என்று வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள்

**ஐநா மனிதஉரிமைபேரவை உறுப்பு நாடுகளுக்கு மனு!!**

டம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளது பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி எழுச்சிப் பேரணி இயக்கம் முன்வைத்துள்ளது. அந்த அமைப்பின்

02

**யாழ். குடாநாட்டில் நேற்று:**

## ஆசிரியை, தாதி உட்பட ஆறு பேருக்கு தொற்று!

யாழ்ப்பாணம், மார்ச் 08

யாழ்ப்பாணத்தில் ஆசிரியை, தாதி, கைதி உட்பட ஆறு பேர் நேற்று கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ். போதனா வைத்திய சாலையின் ஆய்வுகூடத்தில் நேற்று நடத்தப்பட்ட பி.சி. ஆர். பரிசோதனையிலேயே இவர்கள் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

தொற்றுக்குள்ளானவர்களில் மூவர் யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்டவர்கள். இவர்களில் ஒருவர் சிறைக் கைதி ஆவார். மற்றையவர் மல்லாவியில் நடந்த மரணச் சடங்குக்கு சென்று திரும்பியவர்.

02

## தமிழர்களின் கோரிக்கையை நிராகரித்தது பிரித்தானியா!

**பாதுகாப்பு சபையில் ஆதரவில்லை என்று விளக்கம்!**

லண்டன், மார்ச் 08

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி பிரித்தானியாவில் வாழும் 13,500 இற்கும் மேற்பட்டவர்கள் கையொப்பமிட்டு வழங்கிய வேண்டுகோளை பிரித்தானியா நிராகரத்துள்ளது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நிறுவியபோது, ரோம் சட்டத்தில் இலங்கை கையொப்ப

02

## கறுப்பு ஞாயிறு போராட்டம்: வடக்கு - கிழக்கில் இல்லை!

யாழ்ப்பாணம், மார்ச் 08

நேற்று நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கறுப்பு ஞாயிறு போராட்டம் இடம்பெற்ற போதும் தமிழ் கத்தோலிக்கர்கள் அதிகம் வசிக்கும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இடம்பெறவில்லை.

எனினும், கறுப்பு ஞாயிறு போராட்டத்துக்குப் பதிலாக கத்தோலிக்கர்கள் செறிந்து வாழும்

02

**சர்வதேச மகளிர் தினமான இன்று:**

## தமிழ் பெண்களுக்கு நீதி கேட்டு யாழ்., முல்லையில் போராட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 08

அரசாங்கம் தமிழ் பெண்களுக்கு இழைத்த அநீதிகளுக்கு நீதி கோரி சர்வதேச மகளிர் தினமான இன்று யாழ்ப்பாணத்திலும், முல்லைத்தீவிலும் போராட்டங்கள் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெறவுள்ள தீச்சட்டி ஏந்தும் போராட்டம், இன்று முற்பகல் 11 மணியளவில் நல்லூரில் சுழற்சி முறை உண்ணாவிரதப்

02

## கூட்டமைப்புடன் எந்த விடயத்திலும் முன்னணி இணைந்து செயல்படாது!

**கஜேந்திரகுமார் எம்.பி. திட்டவட்டம்**

யாழ்ப்பாணம், மார்ச் 08

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இனிவரும் காலங்களில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எந்த விடயத்திலும் இணைந்து செயல்படாது என்று அந்தக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நேற்று அவரின் கட்சித் தலைமையகத்தில்

02

## சம்பந்தனின் அறிக்கை தன்னிச்சையானது பங்காளிக் கட்சியான ரெலோ நிராகரிப்பு!

**தமக்கு காண்பிக்கவில்லை என்றும் சாடல்**

யாழ்ப்பாணம், மார்ச் 08

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆற்றிய உரைக்கு பதில் அளிக்கும் முகமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஊடகங்களுக்கு வழங்கிய அறிக்கையை, அந்தக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ நிராகரித்துள்ளது.

அந்த அறிக்கையில் ரெலோ கட்சியின் தலைவரின் பெயரும் இருந்தது. ஆனாலும் அந்த அறிக்கை ரெலோ கட்சியின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட

02

## சர்வதேச...

ஒருங்கிணைப்பாளர்களான தவத்திரு வேலன் சுவாமிகள், எஸ். சிவயோகநாதன், வண. பிதா. கந்தையா ஜெகதாஸ் ஆகியோர் இந்த மனுவில் கையெழுத்திட்டு அனுப்பியுள்ளனர். அத்துடன், காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் சங்க பிரதிநிதிகள், வடக்கு- கிழக்கு பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்கள், மதத் தலைவர்கள் உள்ளிட்ட தரப்பினரும் இந்த கோரிக்கைக்கு ஆதரவு வெளியிட்டுள்ளனர்.

“மனித உரிமைகள் பேரவையின் 2021 பெப்ரவரி 19ஆம் திகதியிடப்பட்ட இலங்கை மீதான பூச்சிய வரைவுத் தீர்மானமானது குறிப்பாக தமிழ்ச் சமூகத்தின் அடிப்படை எதிர்பார்ப்புக்களையேனும், விசேடமாக தமிழர்களைக் கொன்றமை மற்றும் தமிழ்ப் பெண்களை வன்புணர்ந்தமை அடங்கலான இலங்கைப் படையினரால் புரியப்பட்ட கொடூரமான குற்றங்களின் பொருட்டான சர்வதேசத்தின் பொறுப்புக்கூறலைப் பூர்த்திசெய்யவில்லை எனக் கருதுகிறோம்.

நிலவரத்தின் தீவிரத்தன்மையின் காரணமாக, இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் (ஐ.சி.சி.) பாரப்படுத்த வேண்டியமையை வலியுறுத்தி ஒரு மாதத்திற்கு முன்னர் 2021ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதியன்று தமிழர்கள் ஒன்றிணைந்து தங்களுக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தோம். இந்த அழைப்பானது அண்மையில் வடக்கு-கிழக்கு சிவில் சமூக அமைப்புக்களினால் ஒழுங்கு செய்யப்பட்டு ஆயிரக் கணக்கான பொதுமக்களின் பங்குபற்றிய பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை என்ற பேரணியின் மூலமாக வலுச்சேர்க்கப்பட்டிருந்தது.

போர்க் குற்றங்கள், மனித நேயத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் தமிழ் மக்களுக்கு எதிராகப் புரியப்பட்டுள்ள இனப்படுகொலை ஆகியவற்றின் பொருட்டு நீதியைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் எந்தவொரு நம்பிக்கையையும் நாம் இழந்துள்ளமையினாலேயே இவ் வேண்டுகோளை நாம் விசேடமாக தங்களிடம் வலியுறுத்திக் கோரியிருந்தோம்.

இலங்கையை ஐ.சி.சியில் பாரப்படுத்தாமல் விடுதலானது கொடூரமான குற்றங்களைப் புரிந்தோர் நீதியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு வழிகோலுவதுடன் மாத்திரமல்லாது, அது இலங்கையின் அரசியல் தலைவர்களும் படைப் பிரதானிகளும் தாம் நீதிக்கு முகங்கொடுக்கத் தேவையில்லை என்பதை நன்கறிந்து கொண்டு, எதுவிதத் தயக்கமும் இல்லாமல் தமிழ் மக்களுக்கு எதிரான சர்வதேசக் குற்றங்களைப் புரிவதற்கான துணிச்சலையும் ஏற்படுத்திவிடும்.

அத்துடன், ஐ.நா. மனித உரிமைகளுக்கான நான்கு முன்னாள் உயர் ஆணையாளர்கள், ஒன்பது சுயாதீன ஐ.நா. நிபுணர்கள் மற்றும் இலங்கை சம்பந்தமான ஐ.நா. செயலாளர் நாயகத்தின் வல்லுநர்கள் குழுவின் சகல உறுப்பினர்களும் அடங்கலாக இருபது முன்னாள் ஐ.நா. அதிகாரிகள் “யுத்த விதைகளை விதைத்தல்” எனத் தலைப்பிடப்பட்டு 2021ஆம் ஆண்டு பெப்ரவரி 18ஆம் திகதி வழங்கிய தமது அறிக்கையில் ஐ.சி.சிக்கு பாரப்படுத்தப்பட வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளனர்.

அத்துடன் இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக புரிந்த சர்வதேச குற்றங்களையும் அதில் சில உதாரணங்களுடன் பட்டியலிட்டுள்ளன. அத்துடன், கடந்த காலத்தில் படையினருக்கு அளிக்கப்பட்ட தண்டனைகளில் இருந்து விடுதலை அளிப்பு, போர் குற்றம் புரிந்தவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரிகளுக்கு பதவியுயர்வுகள் வழங்கப்பட்டமையையும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

மேலும், “எமது கோரிக்கையினை தீவிரத்தன்மையுடன் கருத்திற் கொள்வதன் பொருட்டும் இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட வேண்டியமையை உள்ளடக்குவதன் பொருட்டும் இம் முறையீட்டை நாம் மேற்கொள்கிறோம் - என்றும் புதிதாக அனுப்பிவைத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஐ-3)

## ஐ.நா. மனித...

இந்தப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு பேரவையின் கூட்டத் தொடரின் இறுதியில் - 22 ஆம் திகதி நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதிகளவு நிகழ்வுகளுக்கான நேர ஒதுக்கீட்டைச் செய்ய வேண்டியிருப்பதால், இலங்கை குறித்த வாக்கெடுப்பு எப்போது நடைபெறும் என்பதையிட்டு இதுவரையில் தீர்மானிக்கவில்லை என ஜெனிவா வட்டாரங்கள் தெரிவித்தன. இருந்த போதிலும் 22 ஆம் திகதி வாக்கெடுப்பு இடம்பெறும் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

உத்தியோகப்பற்றற்ற கலந்தாலோசனைகளுக்காக பிரேரணையின் திருத்தப்பட்ட நகல் இன்று பேரவையில் சமர்ப்பிக்கப்படவிருப்பதை உறுதிப்படுத்திய இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே, “பிரேணையை நாம் பரிசீலனை செய்து எமது எதிர்ப்பை வெளிப்படுத்துவோம்” எனவும் குறிப்பிட்டார். கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு இத்தகவலை அவர் தெரிவித்தார்.

‘புதிய நகல் யோசனையின் அடிப்படையில் இணக்கப்பாடான தீர்மானம் ஒன்றுக்கான வாய்ப்புக்கள் உள்ளதா?” எனக் கேட்கப்பட்டபோது, ‘இணக்கப்பாடான தீர்மானம் ஒன்று குறித்து அவர்கள் (இணைத் தலைமை நாடுகள்) முதலில் குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால், சில விடயங்கள் கடுமையானதாக இருந்தமையால் அவற்றை நாம் எதிர்த்தோம். நாம் எமது எதிர்ப்பை வெளிப்படுத்திய பின்னர் அவர்கள் தயாரித்த புதிய பிரேரணையே இன்று வெளியிடப்படுகின்றது. அது எவ்வாறு அமைந்துள்ளது என்பதை அதனைப் பெற்றுக்கொண்ட பின்னரே எம்மால் சொல்ல முடியும். நாம் அதனை ஆராய வேண்டும். ஆனால், இணக்கத்துடனான தீர்மானம் ஒன்றுக்கான வாய்ப்புக்கள் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்” என கொலம்பகே பதிலளித்தார்.

வாக்கெடுப்பின்போது அங்கத்துவ நாடுகளின் ஆதரவு கிடைக்குமா எனக் கேட்கப்பட்டபோது பதிலளித்த கொலம்பகே, ‘மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகரின் உரையின் போது பெரும்பாலான நாடுகள் இலங்கைக்கு ஆதவாக கருத்து வெளியிட்டிருந்தன. இருந்த போதிலும் வாக்கெடுப்பில் இந்த நிலைமை மாற்றமடையலாம். சக்தி வாய்ந்த நாடுகள் அங்கத்துவ நாடுகளை இலங்கைக்கு ஆதரவளிக்காமலிருப்பதற்கான அச்சுறுத்தல்களைக் கொடுப்பார்கள்” எனத் தெரிவித்தார்.

இதேவேளையில், இணக்கப்பாட்டுடனான தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு இணைத் தலைமை நாடுகள் இறுதிவேளையில் முயற்சித்த போதிலும் அதனை இலங்கை நிராகரித்துவிட்டது. வாக்கெடுப்பில் இலங்கை தோல்வியடையும் என்பதை தெரிந்துகொண்டுள்ள போதிலும், வாக்கெடுப்பையே இலங்கை விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

47 உறுப்பினர்களைக் கொண்டுள்ள மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு 10 நாடுகளின் ஆதரவு கிடைக்கும் என்றே முதலில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், கொவிட் தகன விடயத்தில் இலங்கை எடுத்த புதிய நிலைப்பாட்டையடுத்து அது 15 ஆக அதிகரிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இஸ்லாமிய நாடுகள் சிலவற்றின் ஆதரவை இதன் மூலம் இலங்கை பெற்றுள்ளது.

இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் நடுநிலை வகிக்கலாம் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. 29 நாடுகள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கும் என எதிர்பாக்கப்படுகின்றது. பிரேரணையின் திருத்தப்பட்ட வடிவம் இன்று சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அது குறித்த விவாதங்களும் பேரம் பேசல்களும் ஜெனிவாவில் சூடுபிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஆசிரியை...

இன்னொருவர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த நிலையில் தனிமைப்படுத்தலில் இருந்த பெண் ஆவார்.

இதேபோன்று, சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஆசிரியை ஒருவர் தொற்றாளராக இனங்காணப்பட்டவர். இவர் ஏற்கனவே தொற்றாளராக இனங்காணப்பட்ட ஆசிரியையுடன் தொடர்புபட்டவராவார்.

ஏனைய இருவர்களில் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் தாதியாகப் பணியாற்றுபவர். இவர் முன்னர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட தாதியர்களுடன் இணைந்து பணியாற்றியவர். மற்றையவர் அந்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட 79 வயது மூதாட்டி ஆவார். (ஐ-3)

## தமிழ் பெண்...

போராட்டம் இடம்பெறும் இடத்தில் இருந்து ஆரம்பித்து நாவலர் வீதியில் உள்ள ஐ.நா. அலுவலகம் வரை செல்லும்.

இந்தப் போராட்டத்துக்கு பொது, மகளிர் அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் சமூகம் என்பன ஆதரவு தெரிவித்துள்ளன.

இதேவேளை, முல்லைத்தீவில் தொடர் போராட்டம் நடத்தி வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கம் மகளிர் தினத்தை துக்க தினமாக அனுஷ்டித்து போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

முல்லைத்தீவு புனித இராயப்பர் தேவாலயத்தில் முற்பகல் 10 மணிக்கு இடம் பெறும் இந்தப் போராட்டத்தில் அனைத்துத் தரப்பினரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ)

## சம்பந்தனின்...

வில்லை. இது வருத்தத்துக்கு உரியது என்றும் அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு:

“ஜெனிவா கூட்டத் தொடரில் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் தமிழ் மக்களுக்காக நீதிகோரி கொண்டு வரப்படவுள்ள பிரேரணையில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் அடங்கிய கோரிக்கையை மூன்று தமிழ் தேசிய கட்சிகளின் கூட்டுத் தலைமைகள், சமூக அமைப்புக்கள் மற்றும் மதத் தலைவர்கள் ஒன்றிணைந்து கையொப்பமிட்டு அங்கத்துவ நாடுகளுக்கு அனுப்பி வைத்திருந்தோம்.

சமர்ப்பிக்கப்பட இருக்கும் பிரேரணை பலமான உறுதியான சரத்துக்களை உள்ளடக்கியதாக அமையுமிடத்தில்தான் நம்முடைய இனத்திற்கான நீதியை பெற்றுக்கொள்ள முடியும். இந்த வகையில் அதை பலப்படுத்தும் வகையாக தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் இருப்பவர்களும், சர்வதேச உறவுகள்மற்றும் சமூகமும், இணை அனுசரணை நாடுகளும் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்.

இந்த இக்கட்டான, இறுதி வரைவின் வடிவம் என்னவென்று தெரியாமல் இருக்கின்ற சூழ்நிலையிலே, இருக்கின்ற வரைவை பிரேரணையாக வெற்றிகரமாக நிறைவேற்றும்படி இணை அனுசரணை நாடுகளை கோருவது எமது முயற்சியை பலமிழக்கச் செய்வதோடு குழப்பகரமான சூழ்நிலையை ஏற்படுத்துவது மாத்திரமல்லாமல் எமது மக்களின் நீதிக்கான போராட்டத்தையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி கிடைப்பதையும் பலவீனமடையச் செய்யும். ஆகவே, இந்த அறிக்கைக்கு நாம் ஒருபோதும் இணங்க மாட்டோம். எமது மக்களுக்கு நீதி கிடைக்கும் வகையில் பலமான சரத்துகளை உள்ளடக்கிய பிரேரணையை கோருவதே, இழைக்கப்பட்ட அநீதி களுக்கு நீதி கோரி நிற்கும் எமது மக்களுக்கு நாம் செய்யும் தலையாய கடமையாக இருக்கும் - என்றுள்ளது.

## 500 கடந்தது...

வர்களின் எண்ணிக்கை 502ஆக அதிகரித்தது. மேலும், கொழும்பு - நுகேகொடையைச் சேர்ந்த 82 வயது ஆண், பதுளையை சேர்ந்த 72 வயது ஆண், மாத்தறையை சேர்ந்த 77 வயது பெண் கண்டியை சேர்ந்த 74 வயது ஆண் ஆகியோரே உயிரிழந்தனர். (ஐ)

## கறுப்பு ஞாயிறு...

இரணைதீவில் ஜனாஸாக்கள் புதைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அதே சமயம் இது மத ரீதியான பகைமை இல்லை என்றும் குறிப்பிட்டனர்.

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றிய முழுமையான அறிக்கை வெளியிடப்பட வேண்டும், உண்மையான குற்றவாளிகளைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் - அவர்களுக்கு தண்டனை அளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மறை மாவட்டங்களில் கறுப்பு ஞாயிறு போராட்டம் குறித்து எந்த அழைப்பும் விடுக்கப்படவில்லை. அதே சமயம் வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மறை மாவட்டங்களில் இரணைதீவில் ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப்படுவதற்கு அரசின் அறிவிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்கள் இடம் பெற்றன. (ஐ)

## கூட்டமைப்புடன்...

நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், ”நீண்ட காலமாக தமிழ் மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்று வந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பானது கடந்த தேர்தலின்போது சிறிய ஆட்டம் கண்டிருந்த நிலையிலும்கூட தற்போதைய அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றவாறு இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஆதரித்து கையொப்பமிட்டு அரசுக்கு ஆதரவு வழங்கியுள்ளார்.

“இது தமிழ் மக்கள் மீது மீண்டும் தமிழ் தேசிய கூட்டமைப்பு முதுகில் குத்திய ஒரு செயற்பாடாகும். எனவே, இவ்வாறான தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு ஒற்றுமையை வலியுறுத்துவதற்காக அனைத்து கட்சிகளையும், இணைப்பதாக இனி எந்த சிவில் சமூகத்தினரோ, மதகுருமாரோ முன் வர வேண்டாம். எனவே, அவ்வாறான முயற்சிகளை கைவிட வேண்டும் அத்தோடு நாமும் பாராளுமன்றத்திலும், வேறு செயல்பாடுகளிலும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புடன் இன்றிலிருந்து சேர்ந்து பயணிக்க மாட்டோம்“, என்றார். (ஐ)

## தமிழர்களின்...

மிடவில்லை. இந்நிலையில் ஐ. நா. பாதுகாப்புச் சபை ஊடாக மட்டுமே அந்நாட்டை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு பரிந்துரைக்க முடியும். எனினும், பாதுகாப்பு சபையில் உள்ள நாடுகள் இதற்கு முழு ஆதரவளிக்காதமையால் இந்தப் பரிந்துரையை அவர்கள் தமது வீட்டோ அதிகாரத்தின் மூலம் நிராகரிக்கலாம் என்றும் அந்நாடு தெரிவித்துள்ளது.

எனினும், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மற்றும் சர்வதேச சட்ட விதிகள் மீறல்கள் தொடர்பாக பொறுப்புக்கூறல் பொறிமுறைகளை தொடர்ந்தும் வலியுறுத்தப்படும் என்றும் பிரித்தானியா அறிவித்துள்ளது.

இந்நிலையில் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான இடம்பெற்ற அட்டூழியங்களுக்கு சர்வதேச குற்றவியல் பொறுப்புக் கூறல் பொறிமுறையை உருவாக்கும் கடப்பாட்டில் இருந்து பிரித்தானிய அரசு விலகிவிட்டமை குறித்து நாங்கள் ஏமாற்றமடைகிறோம் என்று பேர்ள் அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளரான தாஷா மனோரஞ்சன் தெரிவித்துள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
08.03.2021 திங்கட்கிழமை
சார்வரி, மாசி 24

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகள்?

ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்று இரண்டு வருடங்கள் நிறைவடையவுள்ளது. இந்த பின்னணியில், கர்தினால் மல்கம் ரஞ்சித், ஈஸ்டர் தாக்குதலை நினைவுகூர்ந்து நேற்றைய ஞாயிற்றுக்கிழமையை கறுப்பு ஞாயிறாக பிரகடனம் செய்திருந்தார். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகியதைத் தொடர்ந்து, அது தொடர்பில் மல்கம் ரஞ்சித் காட்டமான விமர்சனங்களை முன்வைத்திருந்தார். தற்போது, அந்த அறிக்கையின் பிரதி அவரிடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. ஈஸ்டர் தாக்குதலின் பின்னாலுள்ள சூத்திரதாரிகள் அனைவரும் சட்டத்தின்முன் நிறுத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்திவரும் மல்கம் ரஞ்சித், அண்மையில் இது தொடர்பில் சர்வதேச நீதிமன்றத்தை நாடப்போவதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்தப் பின்னணியில், ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார். யாரந்த குற்றவாளிகள்? நிச்சயமாக அந்தக் குற்றவாளிகள் இலங்கைக்குள்தான் இருக்க வேண்டும். ஏனெனில், இலங்கைக்குள் இல்லாத குற்றவாளிகளை ஜனாதிபதியால் எவ்வாறு தண்டிக்க முடியும்? ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்றதைத் தொடர்ந்து, உடனடியாகவே அதற்கு பின்னால் சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ்.எஸ் எனப்படும் இஸ்லாமிய அரசே இருப்பதாக நம்பத்தகுந்த தகவல்கள் வெளியாகியிருந்தன. ஏனெனில், குறித்த அமைப்பு இந்த தாக்குதலுக்கு உரிமை கோரியதான செய்திகள் சர்வதேச தளங்களில் வெளியாகியிருந்தன.

தாக்குதல் இடம்பெற்ற முறைமையும், நிச்சயம் ஒரு சர்வதேச பின்புலம்கொண்ட இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பின் வேலையென்பதை தெளிவாக காண்பித்திருந்தது. ஆனால், இது தொடர்பில் பல்வேறு சர்ச்சைக்குரிய கருத்துக்கள் உலவின. குறிப்பாக, இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறும்போது, சதிக் கோட்பாடுகள் தாராளமாகவே வெளிவருவதுண்டு. இப்போது குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென்று கூறிவரும் கர்தினால் மல்கம் ரஞ்சித்தும், இதற்கு பின்னால் ஒரு சக்தி வாய்ந்த நாடு இருப்பதாக அறிக்கை வெளியிட்டிருந்தார். ஆனால், இன்று வரையில் அவர் அது எந்த நாடு என்பதை குறிப்பிடவில்லை. ஒருவேளை, இதற்கு பின்னால் உண்மையிலேயே ஒரு சக்திவாய்ந்த நாடு இருக்குமானால், பின்னர் எவ்வாறு குற்றவாளிகளை இலங்கைக்குள் தண்டிக்க முடியும்? அண்மையில் ஆங்கில ஊடகமொன்றிற்கு கருத்துத் தெரிவித்திருந்த, தாக்குதல் இடம்பெற்றபோது நாட்டின் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கும் புலனாய்வு பிரிவிலுள்ள சிலருக்கும் தொடர்பு இருந்திருக்க வாய்ப்பிருப்பதாக தெரிவித்திருக்கின்றார். அவர் கூறுவது உண்மையாயின், அந்தக் கோணத்தில் இந்த விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். அது தற்போதுள்ள அரசாங்கத்தினால் இயலுமான காரியமா?

இந்தத் தாக்குதல் இடம்பெற்றதைத் தொடர்ந்து சில முஸ்லிம் அரசியல்வாதிகள் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அவர்கள் இப்போதும் இந்த நாட்டில்தான் இருக்கின்றனர். அவர்கள் தொடர்பில் ஒரு முழுமையான விசாரணையை முன்னெடுக்க அரசாங்கம் முயற்சிக்குமா? ஆனால் இதிலுள்ள பிறிதொரு பக்கம், இவ்வாறு குற்றம்சாட்டப்பட்ட முஸ்லிம் அரசியல்வாதிகள் அனைவருமே மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் பங்காளிகளாக இருந்தவர்களே.

உண்மையில், அரசாங்கம் தாக்குதல் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்குமா அல்லது, பல்வேறு ஜனாதிபதி ஆணைக்குழுக்களுக்கு நடந்த கதைதான் இதற்கும் நடக்குமா? இதனை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் போராட்டம் இலக்கைக்குள் வெற்றிபெறுமா அல்லது தோல்வியுறுமா? ஒருவேளை இலங்கைக்குள் தோல்வியுற்றால், அவர் சர்வதேசத்தின் கதவை தட்டுவாரா? இதனையும் பொறுத்திருந்து தான் நோக்க வேண்டும்.

# பெண்கள்: போருக்குப் பிந்தைய வாழ்க்கை

**2021ஆம் ஆண்டுக்கான ‘செல்வாக்கு செலுத்திய 25 பெண்கள்’ பட்டியலில் இடம் பிடித்திருக்கும் சாரா அசால்யாவின் வாழ்க்கை, கற்பனைக் கதைகளை விஞ்சக்கூடியது.**



*பாலினச் சமத்துவம் சார்ந்து 25 ஆண்டுகளாகச் செயல்பட்டுவரும் ‘வுமன் ஒப் இன்ஃப்ளூயன்ஸ்’ அமைப்பு சார்பில் வெளியிடப்பட்டிருக்கும் 2021ஆம் ஆண்டுக்கான ‘செல்வாக்கு செலுத்திய 25 பெண்கள்’ பட்டியலில் இடம்பிடித்திருக்கும் சாரா அசால்யாவின் வாழ்க்கை, கற்பனைக் கதைகளை விஞ்சக்கூடியது.*

*இத்துடன் வாழ்க்கையே முடிந்துவிட்டது என்று பலரும் சோர்ந்துவிடக்கூடிய இடத்திலிருந்துதான் தன் வாழ்க்கைக்கான புதிய பாதையை சாரா கண்டடைந்திருக்கிறார்.*

*“ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னால் கனடாவில் குடியேறியபோது குறைந்தபட்ச ஆங்கிலம் மட்டுமே என் துணை. இப்போது இந்த அளவுக்கு அங்கீகாரம் கிடைக்கும் என்று கனவிலும் நினைத்ததில்லை” என்று தன் ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருக்கிறார் சாரா.*

*இவர் கடந்துவந்த பாதையைப் பற்றித் தெரிந்துகொண்டால் அந்த ட்விட்டர் செய்தியை நம்மால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும். பலஸ்தீனத்தின் காசாவில் உள்ள அகதி முகாம் ஒன்றில் சாரா பிறந்தார்.*

*போரால் அகதிகளாக்கப்படுகிறவர்களுக்கு நேரும் அனைத்துத் துயரங்களுக்கும் அந்த முகாமில் இருந்த ஒரு லட்சத்துக்கும் அதிகமானவர்களைப் போலவே சாராவும் ஆளானார். வன்முறை, கட்டாய இடப்பெயர்வு, இவை தரும் மனப்பதற்றம் ஆகியவற்றால் கடுமையாகப் பாதிக்கப்பட்டார். அந்த வலியிலிருந்துதான் சாரா வல்லமையைப் பெற்றார். அகதி முகாம் கொடுமைகளால் சமூகநீதி, மனித உரிமைகள் குறித்த புரிதல் வலுப்பெற்றதுடன் பிறருக்காக உதவும் எண்ணமும் வேர்விட்டது.*

**புதியோருக்கு உதவி**

*2008இல் காசாவில் நடைபெற்ற போர், சாராவின் வாழ்க்கையில் மாற்றம் நிகழ காரணமாக அமைந்தது. ஒவ்வொரு நாளும் போர் அச்சம் சூழ்ந்த, மரணத்தின் வாயிலுக்குச் சென்றுதிரும்புகிற இந்த வாழ்க்கையைத் தன் குழந்தைகள் வாழக் கூடாது என சாரா நினைத்தார். கணவன், மகனுடன் கனடாவில் குடியேறினார்.*

*புதிய சூழலுக்குத் தன்னைத் தயார்படுத்திக்கொள்ளவும் தனக்கெனத் தனி அடையாளத்தை உறுதிசெய்யவும் கனடாவுக்கு வந்த ஆரம்ப நாட்களில் மிகவும் சிரமப்பட்டார். அப்போதுதான் தன்னைப் போலவே கனடாவுக்குக் குடியேறியவர்களின் அறிமுகம் அவருக்குக் கிடைத்தது.*

*கனடா பல்கலைக்கழகத்தில் தான் எதிர்கொண்ட அனுபவங்கள், தன்னைப் போலவே புலம்பெயர்ந்த மாணவர்களுக்கு உதவும் எண்ணத்தை சாராவுக்கு ஏற்படுத்தியது.*


*புலம்பெயர்ந்த மாணவர்களுக்கான அமைப்பு ஒன்றைத் தொடங்கினார். அதன்மூலம் மாணவர்கள் உயர்கல்வி நிறுவனங்களில் நிதிநல்கை, ஒதுக்கீடு போன்றவற்றைப் பெறுவது எளிதானது. புலம்பெயர்ந்த பெண்களுக்கான ‘சிஸ்டர் டு சிஸ்டர்’ அமைப்பின் மேலாளராக இருப்பதுடன், அந்தப் பெண்களைப் பொருளாதாரரீதியாக முன்னேற்றுவதற்கான பணியையும் செய்துவருகிறார்.*

*ரையர்சன் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு வழிகாட்டும் உதவியாளராகவும் செயல்பட்டுவருகிறார் சாரா.*

*சொந்த மண்ணில் இருந்த தன் வீடு இடிக்கப்பட்டுத் தரைமட்டமாக்கப்பட்டு, மிச்சமிருக்கும் வாழ்க்கை அகதி முகாமுக்குள் முடக்கப்பட்ட நிலையிலும் தனக்கான பாதையைக் கண்டதுடன் பிறருக்கும் வழிகாட்டியாகச் செயல்பட்டுவருகிறார் 32 வயது சாரா.*

**(தி இந்து)**

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு






**மேடம்**
பணியிடத்தில் உங்களுக்குச் சாதகமான சூழ்நிலைகள் இருக்கும். பணம் சம்பந்தமான விஷயங்களில் உங்கள் விருப்பம் நிறைவேறும். நல்ல நிறுவனத்தில் சலுகைகளுடன் வேலை கிடைக்கும்.

**இடபம்**
உற்சாகம் அதிகரிக்கும். பேச்சில் கவனம் தேவை. மற்றவரை மட்டம் தட்ட நினைத்து சிரமத்தில் சிக்க வேண்டாம். மன நிறைவு இருக்கும். கண் கண்ணாடி மாற்றுவீர்கள்.

**மிதுனம்**
எதிர்பாலினத்தினரால் உதவி ஒன்று கிடைக்கும். உங்களின் செல்வாக்கு கூடும். பதவி, பொறுப்புகள் கிடைக்கும். பிள்ளைகளால் சந்தோச செலவுகள் உண்டாகும்.

**கடகம்**
அலுவலகப் பணியின் போது கவனமாக இருப்பது அவசியம். தாமதம் நீங்கும். வரவு இருக்கும். முதலீட்டு செலவு உண்டாகலாம். தந்தையின் உதவிகள் கிடைக்கும். லட்சியங்களை அடைவீர்கள்.

**சிம்மம்**
பிள்ளைகளுக்காக அலைந்து தேவைகளை நிறைவேற்றுவீர்கள். தொடர்பு கொள்ள நினைத்த ஒருவர் அலைபேசியில் அழைப்பார். எண்ணம் ஒன்று ஈடேறும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும்.

**கன்னி**
உடை, நகை சேர்க்கை உண்டு. சுப நிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். பணியாளர்கள் எதிர்பார்த்த நல்ல செய்தி தேடி வரும். விரும்பிய விடயம் ஒன்று சிறு தாமதத்துக்குப் பின் நிறைவேறும்.

**துலாம்**
வாழ்வில் முன்னேறுவதற்கு வழி கிடைத்து மகிழ்வீர்கள். சிக்கனத்தைக் கையாளுவீர்கள். மன நிறைவு ஏற்படும். நல்லவர் ஒருவரின் ஆலோசனையை ஏற்று மாறுவீரகள்.

**விருட்சிகம்**
பொறுமை தேவைப்படும். உடனடி உதவி எதிர்பார்க்காதீர்கள். உறவினர் செயல்கள் சற்று எரிச்சல் ஏற்படுத்தக்கூடும். சிக்கல் ஒன்றைத் தீர்க்க உங்களின் அனுபவம் கை கொடுக்கும்.

**தனுசு**
நேர்மறை எண்ணங்கள் ஏற்படுவதால் மற்றவரைக் கவர்வீர்கள். நினைத்ததற்கு மாறானவருடைய உதவி ஒன்று கிடைக்கும். இடர்பாடுகளை சமாளித்து நிம்மதி அடைவீர்கள்.

**மகரம்**
சகோதரர்கள் குடும்பத்தில் சுபச்செய்தி உண்டு. பல நாள் போராடிய விஷயத்தில் வெற்றியடைவீர்கள். அலுவலகத்தில் வளைந்து கொடுத்துப் போய் வெல்வீர்கள்.

**கும்பம்**
அலுவலகத்தில் நீங்கள் எதிர்பார்த்த விஷயம் நிறைவேறும் அக்கம்பக்கத்தினரின் செயல்பாடுகளில் தலையிட வேண்டாம். எதிர்பாலினத்தினர் தங்கள் ரகசியத்தைப் பகிர்ந்து கொள்வர்.

**மீனம்**
சமீப காலத்தில் ஏற்பட்ட மன வருத்தங்கள் விலகும். நேர்மையான செயல் செய்து மன நிறைவடைவீர்கள். பொறுப்புகளை மற்றவரை நம்பி ஒப்படைக்க வேண்டாம்.

# யாழ். மாநகர சபையை கலைக்க சதி முயற்சி!

## ராஜபக்ஷக்களின் பின்னணியில் முன்னணி மேற்கொள்கிறதாம்!

### மேயர் மணிவண்ணன் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், மார்ச் 08

ராஜபக்ஷவினரின் பின்னணியில் யாழ். மாநகர சபையை கலைக்க சதி நடக்கிறது. இந்த சதி வேலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஈடுபட்டுள்ளது என்று குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார் வி. மணிவண்ணன்.

மாநகர சபையின் செயல்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதிலேயே மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

'யாழ். மாநகர சபையை கலைக்கும் முயற்சி பெரும் செலவில் முன்னெடுக்கப்படுகின்றது. மாநகர சபை முதல்வரான எனதும் மற்றும் ஆதரவு உறுப்பினர்களின் பதவிகளை பறிப்பதன் மூலமே இந்தத்திட்டம் முன்னகர்த்தப்படுகின்றது.

மாநகர சபை முதல்வர் பதவியை நான் இழக்கும் சந்தரப்பத்தில் மாநகரசபை கலையும். இது ராஜபக்ஷ தரப்பு விரும்பிய அல்லது அவர்களது நிகழ்ச்சி நிரல். அவர்கள் விரும்பும் செயலும் இதுவே.

யாழ்ப்பாண பண்பாட்டு மையத்தை பொறுப்பெடுக்கும் அவர்களின் முயற்சிக்கு நாங்கள் தடையாக இருக்கிறோம். இதனால், ராஜபக்ஷ தரப்பு பெருமளவு பணத்தை செலவழித்து எங்களை பதவியில் இருந்து அகற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது.

குறிப்பாக என்னை மாநகர சபை உறுப்பினர் பதவியில் இருந்து விலக்குவதற்காக வழக்குகளிலே ஈடுபட்டு வருகிறது. இந்த செயல்பாடுகளுக்கு எதிராக நாங்கள் கடுமையாகப் போராடி வருகின்றோம். இந்த செயல்பாடுகளுக்காக கிட்டத்தட்ட ஐம்பது இலட்சம் ரூபாவுக்கும் மேல் வழக்குகளுக்காக இதுவரை செலவிட்டுள்ளார்கள் - என்றார்.

இதன்போது, இந்த செயலை நேரடியாகவா - வேறு நபர்கள் மூலமா செய்கிறார்கள் என அவரிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அவர், வழக்கை நடத்துவதற்கு சிலரை வைத்துள்ளார்கள். எங்களின் கட்சியில் உள்ள அவர்களுக்கு விசுவாசமாக இருக்கின்ற, அவர்களின் நிகழ்ச்சி நிரலை ஏற்றுக் கொண்டு துரதிர்ஷ்டவசமாக இனத்தை அழிப்பதற்கான அல்லது இனத்தை பிளவுபடுத்தும் செயல்பாடுகளில் ஈடுபடும் சிலர் ஊடாகவே இந்தச் செயல் முன்னெடுக்கப்படுகின்றது. 2019இல் ராஜபக்ஷ தரப்பு வெல்ல வேண்டுமென்று துடித்தவர்கள் இதனைச் செய்கின்றார்கள்" என்றார். (ஐ-3)

# கொவிட் - 19 தொற்று அச்சம் அகலும் காலம் கனிந்துள்ளது

## மருத்துவர் யமுனானந்தா



யாழ்ப்பாணம், மார்ச் 08

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக உலகை அச்சுறுத்தி வந்த கொவிட் - 19 தொற்று தொடர்பான சமூக அச்சம் அகலும் காலம் கனிந்துள்ளது என்று மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்திய சாலையின் பிரதிப் பணிப்பாளரான அவர் நேற்றைய தினம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக உலகை அச்சுறுத்தி வந்த கொவிட் - 19 தொற்று தொடர்பான சமூக அச்சம் அகலும் காலம் கனிந்துள்ளது. இதில் முதன்மையானது கொவிட் -19 இற்கு எதிரான தடுப்பு ஊசிகளின் செயல் திறனாகும்.

இன்று கொவிட் - 19 வைரஸுக்கு எதிராக 19 வகையான தடுப்பு மருந்துகள் உலகின் பல பாகங்களிலும் பாவனையில் உள்ளன. இவை அடிப்படையில்நான்கு வகையினுள் அடங்குகின்றன. தடுப்பூசி ஏற்றப்பட்டவர்களில் கொவிட் நோய்க்கு எதிரான நோயெதிர்ப்புச் சக்தி உருவாகின்றது. கொவிட் -19 தடுப்பூசி செயல் திட்டம் கொவிட் - 19 பரவலை 40வீதம் குறைத்து விட்டது.

மேலும் கொவிட் - 19 தொற்றால் இறப்பவர் தொகையும் 90 வீதத்திற்கு கீழ் குறைத்து விட்டது. அடுத்து கொவிட் வைரஸ் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக விகாரமடைந்து வருகின்றது. இதில் மூன்று விகாரங்களே அதாவது பிரித்தானியா, தென்னாபிரிக்கா, பிரேஸில் ஆகிய நாடுகளில் ஏற்பட்ட விகாரங்களே மனித உடலில் தொற்று வீதத்தை அதிகரித்து அதிக பாதிப்புகளை ஏற்படுத்தின.

இவ்வாறு விகாரமடைந்த கோவிட் தொற்றுக்களுக்கும் தடுப்பூசி பலன் அளிக்கின்றது. மருத்துவப் பணியாளர்கள், பொது சன உத்தியோகத்தர்கள் தடுப்பு மருந்து செலுத்துவதை முதன்மைப்படுத்துவதற்கு, விகாரமடைந்த பாதகமான கொவிட் - 19 தொற்று பரவாது கட்டுப்படுத்துவதே நோக்கமாகும்.

ஏனைய, விகாரமடைந்த கொவிட் தொற்று மிதமான நோயறிகுறிகளையே ஏற்படுத்துகின்றது. பொதுவாக தற்போது பரவும் கோவிட் தொற்றானது காலத்துடன் தீவிரத் தன்மை குறைந்த தொற்றாகும். இதன் மூலம் சமூகத்திற்கு மந்தை நிர்பீடணம் கிடைக்க வழி ஏற்பட்டுள்ளது. இது கொவிட் -19 தடுப்பூசி பெற்றுக் கொள்வதற்குச் சமனானது.

எனவே கொவிட் -19 தொற்று தொடர்பான தேவையற்ற பீதி தேவையில்லை. கடந்த ஒரு வருடத்திற்கு முன்னைய கெடுபிடி தற்போது தேவையில்லை. மாறாக சமூக இடைவெளி பேணல், முகக்கவசம் அணிதல், கைகளை தூய்மி கொண்டு கழுவல் ஆகிய சுகநல நடைமுறைகளைக் கடைப்பிடிப்போம் - என்றுள்ளது. (ஐ-3)

# ஓ.எல்.பரீட்சையில் ஆள்மாறாட்டம் செய்தவர் கைது

கொழும்பு, மார்ச்.08

கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையின்போது பரீட்சார்த்தியாக ஆள்மாறாட்டம் செய்து, பரீட்சை எழுதுவதற்காக அமர்ந்த குற்றச்சாட்டில் ஒருவர் வலஸ்முல்லை பகுதியில் கைதுசெய்யப்பட்டார்.

28 வயது நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான சந்தேக நபரை வலஸ்முல்லை நீதிவான் நீதி மன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)



# மன்னாரில் நேற்று குருதி தானம்!

மன்னார், மார்ச் 08

மன்னார் மாவட்ட இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் மன்னார் இளைஞர்கள் நேற்று இரத்த தான முகாமை நடத்தினர்.

பசியில்லா மன்னார் அமைப்பின் ஏற்பாட்டில் அதன் மாவட்ட இணைப்பாளர் சதீஸ் தலைமையில் இரத்த வங்கியில் இந்த இரத்த தான முகாம் இடம்பெற்றது.

இந்த இரத்ததான முகாமில் இளைஞர் கழக அங்கத்தவர்கள், பசியில்லா மன்னார் அமைப்பின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டு இரத்ததானம் செய்தனர்.

இந்த அமைப்பால் தொடர்சியாக பிரதேச ரீதியில் இரத்த தான நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடதக்கது. (ஐ)

# மாகாண சபை முறைமைக்கு மாறான முடிவை அரசு இன்னும் எடுக்கவில்லை

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



வவுனியா, மார்ச் 08

**அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கு தனிப்பட்ட நிலைப்பாடுகள், விருப்பு - வெறுப்புகள் இருக்கலாம். ஆனால், அரசாங்கம் மாகாண சபை முறைமைக்கு மாறுபட்ட நிலைப்பாட்டை இன்னும் எடுக்கவில்லை என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

தமிழ் அரசியல்வாதிகளின் பாதை தவறு என்பதை வரலாறு நிரூபித்துள்ளது என்றும் கூறியிருக்கிறார்.

தமது கட்சியான ஈ.பி.டி.பியின் உறுப்பினர்களை நேற்று வவுனியா அரச விருந்தினர் விடுதியில் சந்தித்தார். இதைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இன்று எமது மக்கள் துன்பங்களை அனுபவிக்கும் வகையிலான செயல்களையே தமிழ் அரசியல்வாதிகள் முன்னெடுத்து வருகின்றனர். கோழி கூவி விடியாது. ஆனால், பிரச்னைகளை தீராப் பிரச்னையாக வைத்திருப்பதே தமிழ் தரப்புகளின் எண்ணம். அவர்களின் பாதை தவறு என்பதை வரலாறு நிரூபித்துள்ளது. அன்று நான் சொன்னதை கேட்டிருந்தால் இந்த இழப்புகளும் அழிவுகளும் வந்திருக்காது. நாம் சரியாகத்தான் பயணிக்கிறோம். எமது கருத்துக்கள் போதியளவு மக்கள் மத்தியில் செல்லவில்லை. அதுவே எங்களின் குறைபாடு. அப்படி சென்றிருந்தால் இழப்புகள் குறைந்திருக்கும். தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலுக்கே சென்றிருக்க வேண்டிய தேவை வந்திருக்காது. எனவே, கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அண்மையில் பல்கலைகழக மாணவர்கள் எமது கடற்படையை விமர்சித்து, இந்திய கடற்றொழிலாளர்கள் தமிழர்கள் என்பதால்தான் கொல்லப்பட்டார்கள் என்ற ஒரு பொய்யான ஒன்றை விளக்கம் இல்லாமல் சொல்லியிருந்தார்கள். ஆனால், 1971,காலப் பகுதியில் அரசிற்கெதிராக ஆயுதம் தூக்கியது மக்கள் விடுதலை முண்ணணி. அதில் அங்கம் வகித்தவர்கள் அனைவரும் சிங்கள இளைஞர், யுவதிகள் தான். அவர்களையும் தமிழர்கள் என்றா கொன்றது? இல்லையே. அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதம் தூக்கியதால் அடக்கப்பட்டார்கள்.

எனவே, மக்கள் என்னை ஏற்று அதிக வாக்குகளையும் ஆசனங்களையும் தந்தால், மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி என்ற விடயத்தை செய்து காட்டுவேன் - என்றார். (ஐ)

# மருத்துவ தம்பதியர் மீது தாக்குதல்; மூன்று சந்தேகநபர்கள் கைதாகினர்!

வவுனியா, மார்ச் 08

வவுனியாவில் வீட்டுக்குள் புகுந்து மருத்துவ தம்பதியரை தாக்கினர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மூன்று பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா - வைரவப்புளியங்குளத்தில் கடந்த முதலாம் திகதி நள்ளிரவு மருத்துவ தம்பதியரின் வீட்டுக்குள் நால்வர் கொண்ட குழு புகுந்தது.

இவ்வாறு புகுந்தவர்கள் உறங்கிக் கொண்டிருந்த மருத்துவர்களான கணவனையும் மனைவியையும் கம்பியால் தாக்கியது. அத்துடன், அவர்களின் கைபேசிகள், பேர்ஸ், மோட்டார் சைக்கிள் திறப்பு, கைக்கடிகாரம், சி.சி.ரீ.வி. காணொலி சேமிப்பகம் என்பவற்றை எடுத்தவர்கள், அங்கிருந்த சி.சி.ரீ.வி. கமெராக்களையும் அடித்து நொருக்கிவிட்டு தப்பிச் சென்றனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் நேற்று முன்தினம் மூன்று பேரை பொலிஸார் கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர். தாக்குதலில் காயமடைந்த மருத்துவ தம்பதியர் தற்போதும் வவுனியா மருத்துவமனை யில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ)

# போதையில் வாகனம் செலுத்தியோர் கைது!

வவுனியா, மார்ச் 08

வவுனியாவில் மது போதையில் வாகனங்களை செலுத்திய 7பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவுப் பொறுப்பதிகாரி காமினி திஸநாயக்க தெரிவித்தார்.நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைதானவர்களின் வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் கூறினார். (ஐ)

# கடலில் குளித்தவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு!

முல்லைத்தீவு, மார்ச் 08

முல்லைத்தீவு நாயாறு கடல்நீரேரியில் நண்பர்களுடன் குளிக்கச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கிப் பலியானார்.

வவுனியாவை சேர்ந்த இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார் என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

வவுனியாவிலிருந்து வந்தவரும் நண்பர்களுமாக நான்கு பேர் நேற்று நாயாற்றுக் கடலில் நீராடினர். கரை திரும்பிய போது மூவர் மட்டுமே இருந்தனர்.

இதையடுத்து அவரைத் தேடும் பணியில் அப்பகுதி மீனவர்களும் கடற்படையினரும் ஈடுபட்டனர். சுமார் மூன்று மணி நேரத் தேடுதலின் பின்னர் காணாமல் போனவர் சடலமாக மீட்கப்பட்டார்.

அவரது சடலம் முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# வவுனியா விடுதியில் தங்கியிருந்த கொழும்புவாசி திடீர் உயிரிழப்பு!

வவுனியா, மார்ச் 08

வவுனியா விடுதியில் தங்கியிருந்த ஒருவர் திடீரென வீழ்ந்து இறந்தார்.

வவுனியாவிலுள்ள விடுதியில் கொழும்பு, யாழ்ப்பாணத்தை சேர்ந்த இரு நண்பர்கள் தங்கியிருந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து வந்த நபர் திடீரென சுகவீனம் அடைந்து தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் விடுதிக்கு திரும்பியிருந்தார்.

இந்நிலையில், மீண்டும் திடீரென மயக்கமுற்று கீழே விழுந்த அவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அவர் வழியிலேயே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.இவ்வாறு உயிரிழந்தவர் கொழும்பு தெகிவளையை சேர்ந்த 48 வயது ஜெகநாதன் உதயராஜ் என்று தெரிய வருகின்றது.

குறித்த நபர் திடீரென எவ்வாறு இறந்தார், இவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கலாம் எனும் சந்தேகத்தில் மரணித்தவருக்கான பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்வதற்காக குறித்த நபரின் சடலம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# முல்லைத்தீவில் கைக்குண்டுகள் மீட்பு

முல்லைத்தீவு, மார்ச் 08

முல்லைத்தீவு சாலை பகுதியில் இரு கைக்குண்டுகள், மற்றும் வெடிமருந்துகள் மீட்கப்பட்டுள்ளன.

தமக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே விசேட சோதனை நடவடிக்கையிலேயே இவை மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட கைக்குண்டுகளை செயலிழக்க செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)





பண்டத்தரிப்பு காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் நடனத் திருவிழாவும் 2019 சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் கௌரவிப்பு விழாவும் அண்மையில் இடம்பெற்றபோது...

# உணவு தவிர்ப்புப் போராட்டம் இன்று முடிவுக்கு வரவேண்டும்

## மட்டக்களப்பு பொலிஸார் காலக்கெடு




**மட்டக்களப்பு,மார்ச்08**

**தமிழர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்னைகளுக்கு உரிய தீர்வை எதிர்பார்த்து மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய முன்பு முன்னெடுக்கப்பட்டு வரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை இன்று காலைக்குள் முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என மட்டக்களப்பு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.**

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு சர்வதேச ரீதியில் நீதிவேண்டி வடக்கு - கிழக்கில் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த புதன்கிழமை ஆரம்பமான போராட்டம் ஐந்தாவது நாளாக நேற்றும் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்றுப் பிற்பகல் போராட்டம் இடம்பெறும் பகுதிக்கு சென்ற மட்டக்களப்பு பொலிஸார் சிலரின் பெயரை வாசித்து அவர்களுக்கு தடை உத்தரவு உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

எனினும் பொலிஸார் குறிப்பிட்ட பெயரில் இங்கு யாரும் இல்லையென தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தப் பகுதியில் போராட்டம் நடத்த முடியாது இங்கிருந்து இன்று காலை 9 மணிக்கு முன்னர் வெளியேறிச்செல்லுமாறு பொலிஸாரால் பணிக்கப்பட்டதாகவும் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

சுகாதார நடைமுறைகளைப் பேணி மிகவும் அமைதியான முறையில் போராட்டம் மேற்கொண்டுவரும் மக்களை அச்சுறுத்தும் வகையில் பொலிஸ் உத்தியோகத்தர் நடந்துகொண்டார் என அருட்தந்தை க.ஜெகதாஸ் தெரிவித்தார்.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண்களை அவர் கையடக்க தொலைபேசியில் புகைப்படம் எடுத்ததாகவும், பெண்களின் அனுமதியின்றி பொலிஸ் உத்தியோகத்தர் இவ்வாறு செயல்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். இன்று நீதிமன்ற உத்தரவுடன் வருவதாகவும் காலை 9 மணிக்கு முன்பு அங்கிருந்து சென்றுவிடவேண்டும் என அச்சுறுத்தும் பாணியில் தெரிவித்தாகவும் இதன் போது தெரிவிக்கப்பட்டது.(எ)



# விஷ பாம்புகளையும் காப்பாற்றும் மாணவி!

*கொழும்பு, மார்ச் 08*

பாம்பு உள்ளிட்ட விஷமுள்ள ஊர்வனவற்றைப் பத்திரமாகப் பிடித்து பாதுகாப்பான இடங்களில் விடும் பாடசாலை மாணவி ஒருவர் பற்றிய தகவல் வெளியாகியுள்ளது.

கேகாலை மாவட்டத்தின் மொலகொட பகுதியை சேர்ந்த 19 வயதான ஹசந்தி பாக்யா ஹிதிபந்தரம என்ற மாணவியே இவ்வாறு, தனது பகுதியில் பாம்பு உள்ளிட்டவற்றை வீடுகளில் இருந்து மீட்டு வருகிறார்.

ரம்புக்கன பின்னவல தேசிய பாடசாலையில் வர்த்தகப் பிரிவில் கல்வி பயின்று வரும் இவர், இதுவரை 70 இற்கும் அதிகமான பாம்புகளை பிடித்து காட்டில் விட்டுள்ளார். 200 இற்கும் அதிகமான ஊர்வனவற்றை மீட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

அந்தப் பகுதியில் வீடுகள், கடைகள் மற்றும் வளாகங்களில் நுழையும் அதிக விஷம் மிக்க பாம்புகளையும் அவர் கையால் பிடித்து அவற்றுக்கு தீங்கு நேராத இடங்களில் கொண்டு சென்று விடுகின்றர்.

கடந்த 3 ஆண்டுகளாக அவர் இந்தப் பணியை செய்து வருகின்றார். அவரது பாட்டனார் அந்த பகுதியில் பிரபலமான சிங்கள பாரம்பரிய வைத்தியர். பாம்புக் கடிக்கு சிகிச்சையளிப்பதில் பெயர் பெற்றவர். பாம்புகள் மற்றும் விஷ உயிரினங்களால் தீண்டப்படும் கிராமவாசிகள் அவரிடம் சிகிச்சைக்கு வருகிறார்கள்.

தம்மை தீண்டிய விஷ உயிரினங்களை அவர்கள் எடுத்து வருவதால், அவர் சிறுவயது முதலே விஷ உயிரினங்களை கையாளத் தொடங்கினார்.

வீட்டுக்கு கொண்டு வரப்படும் உயிரினங்கள் சில நாட்கள் வீட்டில் வைக்கப்பட்ட பின்னர் காட்டில் விடப்படுகின்றன. தாத்தாவிடமிருந்து பாரம்பரிய மருத்துவத்தை கற்ற ஹசந்தி, இப்பொழுது வீட்டுக்கு வரும் நோயாளிகளுக்கு மருந்து வழங்கி வருகிறார். (ஐ)

# அரசமைப்பின் ஆரம்ப வரைவு விரைவில் நீதி அமைச்சரிடம்!

## அரசமைப்பு நிபுணர் குழு தெரிவிப்பு

*கொழும்பு, மார்ச் 08*

புதிய அரசமைப்பின் ஆரம்ப வரைவு இம்மாத இறுதியில் அரசிடம் கையளிக்கப்படவுள்ளது என்று அரசமைப்பை உருவாக்குவதற்கான நிபுணர் குழு தெரிவித்துள்ளது.

புதிய அரசமைப்புக்கான வரைவைத் தயாரிப்பதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி ரமேஷ் டி சில்வா தலைமையிலான நிபுணர் குழு 6 மாதங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்டது.

இந்தநிலையில், இந்தக் குழு அதன் முதல் அறிக்கையை இந்த மாத இறுதிக்குள் அரசிடம் கையளிக்கவுள்ளது. அரசமைப்புக்கான வரைவைத் தயாரிக்கும் குழு கடந்த ஆறு மாதங்களில் அரசியல் கட்சிகள், மதத் தலைவர்கள், சிவில் அமைப்புகள் உட்பட பல்வேறு தரப்பினரதும் கருத்துக்களைப் பெற்றுக்கொண்டுள்ளது.

மேற்படி அனைத்துத் தரப்பினர்களதும் கருத்துக்களை உள் வாங்கி, தயாரிக்கப்பட்டு வரும் ஆரம்ப வரைவு நீதி அமைச்சரிடம் கையளிக்கப்படவுள்ளது.

புதிய அரசமைப்புக்கான வரைவைத் தயாரிப்பதற்கான நிபுணர் குழுவின் பதவிக் காலமும் இந்த மாதத்துடன் நிறைவடைகின்றமை குறிப்பிடத்தக்கது. வரைவை நீதி அமைச்சர் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்து, அமைச்சரவையின் அனுமதியுடன் வரைவு பாராளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

# உண்ணாவிரத போராட்டத்தில் முன்னாள் எம்.பிக்கள்!

*அக்கரைப்பற்று, மார்ச் 08*

அம்பாறை மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.சிறிசேன் உள்ளிட்ட பிரமுகர்கள் இணைந்தனர்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த வலியுறுத்தி, மூன்றாவது நாளாக அம்பாறை மாவட்டத்தின் பாண்டிருப்பு திரௌபதை அம்மன் கோவில் முன்றலில் சுழற்சிமுறையில் உண்ணாவிரதப் போராட்டம் நடக்கிறது.

இந்தப் போராட்டத்திலேயே முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றையதினம் பங்கேற்றனர்.

இதேவேளை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு இலங்கையைப் பாரப்படுத்த வலியுறுத்தி மட்டக்களப்பு, யாழ்ப்பாணத்திலும் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மதுபானம் வாங்க பணம் தர மறுத்த பாட்டியாரை தீ மூட்டி கொன்ற பேரன்!

*கொழும்பு, மார்ச் 08*

மதுபானம் வாங்குவதற்கு பணம் தர மறுத்ததால் வீட்டுக்குள் வைத்து பாட்டியாரை தீ மூட்டி எரித்துக் கொன்ற பேரனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் இரத்தினபுரி மாவட்டத்தின் பலாங்கொடை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவதில் 84 வயதான பாட்டியார் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட இளைஞனை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, பலாங்கொடை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)



# நெடுந்தீவில் இலவச மருத்துவ முகாம்!

*நெடுந்தீவு,மார்ச் 08*

ஐ.எப்.ஆர்.சி அனுசரணையுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் இணைந்து வழங்கிய இலவச மருத்துவ முகாம் நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்றது.

யாழ். போதானா வைத்தியசாலையின் மருத்துவர் சு.சிவபாதமூர்த்தி தலைமையிலான மருத்துவர்கள் குழு கொவிட் - 19 சுகாதார நடைமுறைகளுக்கமைவாக இந்த முகாமை நடத்தியது.

இந்த இலவச மருத்துவ முகாமில் பொதுமக்கள், சிறுவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இதில் பங்கெடுத்த 21 பேருக்கு கண் பார்வை சம்பந்தமான அறுவை சிகிச்சை எதிர்வரும் 26ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் காலதாமதமின்றி இலவசமாக செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

இந்த இலவச மருத்துவ முகாமை நெடுந்தீவு செஞ்சிலுவை சங்கத்தின் தலைவர் எட்வேட் அருந்தவசீலன் தலைமையிலான குழுவினர் ஏற்பாடு செய்து வழிநடத்தியிருந்தனர். (ஐ)

# ‘கறுப்பு ஞாயிறு’ போராட்டம்: மட்டு., அம்பாறையில் இல்லை!

மட்டக்களப்பு, மார்ச் 08

**கறுப்பு ஞாயிறு போராட்டத்தை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட கத்தோலிக்க தேவாலயங்கள் கடைப்பிடிக்கவில்லை. எனினும், வழமைபோன்று தேவாலயங்களில் திருப்பலி பூசைகள் இடம்பெற்றன.**

இதேசமயம், சகல தேவாலயங்களிலும் நேற்றைய தினம் இராணுவம், பொலிஸார் பலத்த பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையை முழுமையாக வெளியிட வேண்டும், தாக்குதலுடன் தொடர்புடையவர்களுக்கு கடும் தண்டனை வழங்க வேண்டும் என்று கோரி நேற்றைய நாளை கறுப்பு ஞாயிறு தினமாக அனுஷ்டிக்கும் போராட்டத்துக்கு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் அழைப்பு விடுத்திருந்தார்.

நேற்றைய தினம் நாட்டின் பல பகுதிகளிலும் கறுப்பு ஞாயிறு தினம் பின்பற்றப்பட்டது. இந்நிலையிலேயே சிறுபான்மை மக்கள் செறிந்து வாழும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கறுப்பு ஞாயிறு போராட்டங்கள் இடம்பெறவில்லை. அத்துடன், இந்தப் போராட்டம் குறித்து இந்த மறை மாவட்டங்கள் அழைப்பு விடுக்கவில்லை என்றும் கூறப்படுகின்றது. (ஐ)



## எதிர்ப்பு அரசியல் செய்வது இலகு

### சந்திரகாந்தன் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 08

“எதிர்கட்சியில் இருக்கும் போது எதுவும் கதைக்க முடியும். கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அதனையே செய்கின்றார்கள்”,

இவ்வாறு கூறியுள்ளார் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான பிள்ளையான் என்று அறியப்பட்ட சி. சந்திரகாந்தன்.

கிராம சேவையாளர் பிரிவுக்கு ஐந்து வீடுகள் என்ற திட்டத்தின்கீழ் மட்டக்களப்பு - வாழைச்சேனை - பேத்தாழையில் வீடு ஒன்றுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

கடந்த அரசாங்கம் வீட்டுத்திட்ட கிராமங்களை உருவாக்கியது. அதில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. அதிலும் வசதி படைத்தவர்களுக்கு வழங்கியதாக முறைப்பாடுகள் உள்ளன. ஆனால், இந்த அரசாங்கம் குடிசை வீடுகளில் உள்ளவர்களை இனங்கண்டு வீடுகளை வழங்கி வருகின்றது. எனது மாவட்டத்தில் குடிசை வீடுகள் இருக்கக் கூடாது என்று ஆசைப்படுகின்றேன். இதற்காகவே அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுகின்றோம்.

எதிர்கட்சியில் இருக்கும் போது எதுவும் கதைக்க முடியும். சாணக்கியன் அதனை செய்கின்றார். வாழைச்சேனை மீன்பிடி துறைமுகம் பற்றி பேசுகின்றார். மீன்பிடித்துறைமுகம் யாரின் ஆட்சியில் கட்டப்பட்டது அதன் வரலாறு என்ன என்று அவருக்கு என்ன தெரியும்?

இதேபோன்றுதான் கடந்த ஆட்சியில் எதிர்கட்சியில் இருந்த இப்போதைய இராஜாங்க அமைச்சர் கூறினார். பாசிக்குடாவில் உல்லாச விடுதிகள் அமைக்க பிள்ளையான் காணி வழங்கினார் என்று கடந்த ஆட்சியில் எதிர்க்கட்சியில் இருந்து கூக்குரலிட்டவர் இன்று ஆளும்தரப்பில் இராஜாங்க அமைச்சர். அவர் கடந்த காலத்தில் கூறியதுபோல் இப்போது கூறமுடியாது. அரசியல் ரீதியான பிரச்னைகள் இருக்கலாம். மக்களுக்கு எமது அரசியல் காலத்தில் என்ன செய்துள்ளோம் என்பதுதான் முக்கியம் - என்றார். (ஐ)

## ஜனாஸாக்கள் அடக்கம் நேற்றும் தொடர்ந்தது

ஓட்டமாவடி, மார்ச் 08

கொரோனா தொற்றால் உயிரிழந்த இஸ்லாமியர்களின் சடலங்களை அடக்கம் செய்யும் நடவடிக்கை மட்டக்களப்பு - ஓட்டமாவடியில் மூன்றாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

நேற்று மாலை வரை அங்கு 24 ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப்பட்டன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

கொரோனா தொற்றால் உயிரிழந்த இஸ்லாமியர்களின் உடல்களை அடக்கம் செய்யும் நடவடிக்கை கடந்த வெள்ளிக்கிழமை முதல் இடம்பெற்று வருகின்றன.

ஓட்டமாவடி மஜ்மா நகரில், நாட்டின் பல இடங்களிலும் மரணித்த இஸ்லாமியர்களின் உடல்கள் 10 ஏக்கர் காணியில் அடக்கம் செய்யப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## இரணைதீவை புதைகுழி ஆக்காதே! இளவாலையில் நேற்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 08

இரணைதீவில் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று வடக்கின் பல தேவாலயங்களிலும் போராட்டங்கள் இடம்பெற்றன. இளவாலை புனித யாகப்பர் ஆலயத்திலும் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

தேவாலயத்தில் இடம்பெற்ற திருப்பலி பூசையை தொடர்ந்து இந்தப் போராட்டம் இடம்பெற்றது. இதில் யாகப்பர் தேவாயலத்தின் பங்குக்குரிய மக்கள் சுகாதார முறைப்படி கூடி எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதன்போது, “அரசே நீ விளைநிலங்களை புதைகுழியாக மாற்றாதே”, “அரசே நீ தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிக்காதே”, “அரசே இரணைதீவை கொவிட் -19 புதைகுழயாக்கி விடாதே”, என்று எழுதப்பட்ட சுலோக அட்டைகளை கைகளில் ஏந்தியிருந்தனர். (ஐ)

## பொலிஸாரை சமூகவலைதளத்தில் விமர்சித்தவருக்கு விளக்கமறியல்!

மட்டக்களப்பு, மார்ச் 08

கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முகப்புத்தகத்தில் மோசமாக விமர்சித்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு - ஏறாவூர் பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அண்மையில், சுகாதாரப் பிரிவினரும் - பொலிஸாரும் இணைந்து ஏறாவூர் பகுதி பாடசாலை ஒன்றில் கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதை காணொலியாக தனது கைபேசியில் எடுத்த ஒருவர், அந்நடவடிக்கையை மிக மோசமாக விமர்சித்திருந்தார்.

இதையடுத்து, நேற்று முன்தினம் அவர் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். சந்தேகநபரை, நாளை மறுதினம் புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)



## உணவாகும் பிளாஸ்ரிக், பொலித்தீன் உயிராபத்தில் கிழக்கு யானைகள்!

அக்கரைப்பற்று, மார்ச் 08

பொலித்தீன், பிளாஸ்ரிக் கழிவுகளை உண்பதால் யானைகள் உயிராபத்தை எதிர்கொண்டுள்ளன என்று, ஜீவகாருண்ய அமைப்புக்கள், சுற்றுச்சூழலியலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

உணவுப் பற்றாக்குறை காரணமாக குப்பைமேடுகளில் கொட்டப்படும் பொலித்தீன், பிளாஸ்ரிக் கழிவுகளையும் ஏனைய கழிவுப் பொருட்களையும் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் யானைகள் உண்கின்றன என்பது ஆய்வில் தெரிய வந்தது. இது தொடர்பான ஒளிப்படங்களும் வைரலாகியிருந்தன.

இந்நிலையில், மின்வேலிகளை உடைத்துக் கொண்டு கிராமங்களுக்குள் நுழையும் யானைகளும் கழிவுகளை பொதிகளாக அப்படியே உண்கின்றன. இவற்றால் யானைகளுக்கு சமிபாட்டுப் பிரச்னை உட்பட பல பிரச்னைகள் ஏற்படும். இதனால், நாளடைவில் அந்த யானைகள் உயிரிழக்கின்றன.

மேலும், யானைகளின் எச்சமான இலத்தியில் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியளவுக்கு மோசமான கழிவுகள் காணப்படுகின்றன என்றும் மேற்படி அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

எனவே, இப்பிரச்னையிலிருந்து யானைகளை மீட்டெடுக்க கழிவு முகாமைத்துவத்தில் முறையான திட்டமிடல்கள் அவசியம் என்று வலியுறுத்தியுள்ள அந்த அமைப்புகள், இது விடயத்தில் துறைசார் நிபுணர்களின் பங்களிப்பையும் கோரியுள்ளன. (ஐ)

## தமிழர் நலன் சார்ந்து அரசுடன் பேச முடியும் என்று நம்பினோம்!

### கலையரசன் எம்.பி சொல்கிறார்

‘‘அக்கரைப்பற்று, மார்ச் 08

‘புதிய அரசாங்கம் நல்ல சூழலை ஏற்படுத்தும்போது தமிழர் நலன்சார்ந்து பேச்சு நடத்தலாம் எனும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே 2021 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிக்காமல் நாங்கள் வெளியேறினோம். ஆனால், நடந்தவையோ வேறு’’.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்று கோளாவில் மக்கள் அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற பொது நூலக திறப்பு விழா நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், “மக்கள் நலன் சார்ந்து அரசாங்கத்துடன் பேச்சு நடாத்தலாம் எனும் நம்பிக்கையில் நாம் செயற்பட்டோம். ஆனாலும் அந்த நிலை மாறி தற்போது எமது ஆலயங்கள் சுவிகரீக்கப்படுகின்றன. இந்த நிலை மாற வேண்டும். நாங்கள் வன்முறையாளர்கள் அல்ல. இந்த நாட்டில் அனைத்து இனங்களோடும் இணைந்து ஒற்றுமையாக வாழ வேண்டும் என நினைப்பவர்கள். இந்த நாட்டிலே ஜனநாயகம் நிலை நிறுத்தப்படவேண்டும் சமாதானம் உருவாக்கப்படவேண்டும்.

“தமிழ்த்தேசிய கூட்டமைப்பு என்ன செய்கின்றது என்கின்றனர் சிலர். எங்களின் மக்கள் எங்கள் மண்ணில் வாழ வேண்டும் என்பதற்காக குரல் கொடுக்கின்றோம். மாறாக நாங்கள் தனி மனிதராக வாழ வேண்டும் என்றால் வாழ்ந்து சென்றிருக்கலாம். இதனை மறந்து சிலர் வேறு திசையில் செல்கின்றனர். இதனை நீங்கள் நிறுத்த வேண்டும். இல்லையேல் 22 உறுப்பினர்கள் 10 உறுப்பினர்கள் ஆனது போல் எதிர்காலத்தில் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்க பாராளுமன்றத்தில் யாரும் இருக்க மாட்டார்கள்”- என்றார். (ஐ)





# சசிகலாவை சேர்க்க பன்னீர் போட்ட திட்டம்: முறியடித்த எடப்பாடி!

மார்ச் 3 ஆம் திகதி இரவு திடீரென சென்னை. தி.நகரில் இருக்கும் சசிகலா, அரசியலில் இருந்து ஒதுங்கியிருக்கப் போவதாக அறிக்கை ஒன்றை வெளியிட அதிமுக, அமமுக தொண்டர்கள் மட்டுமல்ல திமுக தொண்டர்களும் அதிர்ச்சியோடும் ஆச்சரியத்தோடும் பார்த்தார்கள்.

ஆனால், இந்த அறிவிப்பு வந்தவுடன் அ.தி.மு.கவின் இணை ஒருங்கிணைப்பாளரும் முதல்வருமான எடப்பாடி பழனிசாமி எந்த சலனத்தையும் வெளிப்படுத்திக் கொள்ளாமல், புன்னகைத்து வைத்தார்.

எடப்பாடி உரிய முறையில் சசிகலாவுக்கு அனுப்பி வைத்த மெசேஜ்தான் அவரது இந்த முடிவுக்குக் காரணம்.

இதற்கு அடிப்படையான இரு காட்சிகள் இப்போது அதிமுக, பாஜக டாப் லெவலில் பரபரப்பாக விவாதிக்கப் படுகின்றன.

பெப்ரவரி 28 ஆம் தேதி இரவு... மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா விழுப்புரம் நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு சென்னை திரும்புகிறார். அந்த நட்சத்திர ஹோட்டலில் அவரை சந்திக்க ஓ.பன்னீரும், எடப்பாடி பழனிசாமியும் சில நிமிடங்கள் முன்பே வந்து காத்திருக் கிறார்கள்.

இருவரும் சேர்ந்து சந்திப்பதற்கு முன்பாக சில நிமிடங்கள் ஓபிஎஸ் அமித் ஷாவை தனியாக சந்திக்க நேரம் கேட்கிறார். அமித் ஷாவுடன் தேசிய பொதுச் செயலாளர் சந்தோஷ் ஜி இருக்கிறார். அமித் ஷா, 'என்ன ஓ.பி.எஸ்.ஜி?'என்று கேட்கிறார்.

'வரும் சட்டமன்றத் தேர்தலில் அ.ம.மு.கவும், சசிகலாவும் நம்மோடு சேர்ந்தால்தான் தென் மாவட்டத்துல நம்மால வெற்றிபெற முடியும். ஒண்ணு வெளிப்படையாக சொல்றேன்... அவங்களை சேர்த்துக்கலைன்னா தேனி மாவட்டத்துல நானே வெற்றி பெறுவேனானு தெரியாது. நானே தோற்றுவிடக் கூடிய அபாயமும் இருக்கு. அதனால நாம அவங்களை கூட்டணிக்குள்ள வச்சிக்கறது நல்லது ஜீ" என்று அமித் ஷாவிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறார் பன்னீர் செல்வம்.

பன்னீரிடம் புன்னகைத்துவிட்டு அடுத்து எடப்பாடி பழனிசாமியை அழைத்தார் அமித் ஷா. சில நிமிடங்கள் வேறு பேச்சுகள் பேசிவிட்டு, இந்த விவகாரம் பற்றி எடப்பாடி பழனிசாமியிடமே கேட்கிறார் அமித் ஷா.

"ஏற்கனவே நான் டெல்லியில உங்ககிட்ட சொன்னேன். இங்க நீங்க வந்திருந்தபோது உங்ககிட்ட சொன்னேன். அவங்களால நமக்கு எந்த லாபமும் கிடையாது. இரட்டை இலை சின்னம் நம்மகிட்ட இருக்கு. இரட்டை இலைங்குறது தமிழ்நாட்டு மக்கள்கிட்ட இருந்து பிரிக்க முடியாதது. கடந்த பத்து தேர்தல்களாக நமக்கு கிடைச்சிருக்கிற புள்ளி விவரத்தை வச்சி இதை நான் சொல்றேன். வேணும்னா தேர்தல் முடிஞ்சு இது உங்களுக்கு தெரியவரும். சசிகலாவால நமக்கு எந்த பிரச்சினையும் வராது. வேணும்னா நானே அவங்ககிட்ட பேசி அதை நான் உறுதிப்படுத்துறேன். மத்தபடி நாம தினகரனை சேர்த்தோம்னா அவர் எல்லாத்தையும் ஸ்பாயில் பண்ணிடுவாரு' என்று சில நிமிடங்கள் விளக்கினார் எடப்பாடி.

ஜனவரி 18 ஆம் திகதி அமித் ஷாவை சந்தித்த போது என்ன நிலையில் இருந்தாரோ அந்த நிலையில் இருந்து நூலளவு கூட தடம் மாறா மல் அமித் ஷாவிடம் விளக்கினார் எடப்பாடி.

இதன் பிறகு அமித் ஷா எடப்பாடியின் தோள்களில் தட்டி சிரித்ததோடு சரி... அதுபற்றி மீண்டும் எதுவும் பேசவில்லை. மற்ற விஷயங்களை பேசியிருக்கிறார்.

தர்மயுத்தம் நடக்கும்போதே ஓ.பன்னீர் தன்னை தேடி வந்து சந்தித்ததை பொதுவெளியில் போட்டு உடைத்தார் தினகரன். அதை ஒரு கட்டத்தில் பன்னீரும் ஒப்புக் கொண்டார். ஓ.பன்னீருக்கும் தினகரனுக்குமான தொடர்பு தற்போது வரை தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது.

ஓ.பன்னீரின் இரண்டாவது மகன் ஜெய பிரதீப் மூலம்தான் ஓ.பி.எஸ்சுக்கும் தினகரனுக்குமான தகவல் தொடர்பு தொடர்ந்துகொண்டிருக்கிறது. சென்னையில் இருக்கும் மிகப்பெரிய பில்டர் ஒருவர் மூலமாக ஓபிஎஸ்சுக்கும் தினகரனுக்கும் இடையேயான உறவும் கட்டியெழுப்பப்பட்டு வருகிறது. இந்தப் பின்னணியில்தான், சசிகலா பற்றி எடப்பாடி பழனிசாமி ஜனவரி 19 ஆம் திகதியே தெளிவாககூறிய பின்பும், தேர்தல் பிரச்சாரங்களில் கூறிய பின்னரும் அதிமுக ஒருங்கிணைப்பாளரான ஓ.பன்னீர் அதுபற்றி ஒரு வார்த்தை கூட வாய் திறக்கவில்லை.

இந்த நிலையில் தினகரன் மூலமாக கிடைத்த அறிவுரைப்படிதான், அமித் ஷாவிடம், 'சசிகலாவையும் அமமுகவையும் சேர்க்கவில்லை என்றால் நானே தோற்றுவிடுவேன்' என்று கடைசி அஸ்திரத்தை ஏவியிருக்கிறார் ஓ.பன்னீர்.

இந்த அஸ்திரம் எங்கிருந்து வருகிறது, எதற்காக வருகிறது என்பதைப் புரிந்துகொண்ட எடப்பாடி பழனிசாமி அமித் ஷாவிடம் அதுபற்றி தேர்தல் கணக்கு ரீதியாகவே எடுத்துரைத்து அந்த நள்ளிரவிலேயே பன்னீர் மூலமாக தினகரன் ஏவிய அஸ்திரத்தைப் பாதி பாதியாக முறித்துப் போட்டுவிட்டார்.

இதற்குப் பிறகுதான் நாம் ஏற்கனவே தெரிவித்தது போல சசிகலாவுக்கு சென்று சேர வேண்டிய செய்தி கள் எடப்பாடியிடம் இருந்து சென்று சேர... மார்ச் 3 ஆம் திகதி இரவு அந்த முடிவை அறிவித்தார் சசிகலா.

தமிழ்நாட்டு அரசியலில்... பெப்ரவரி 28 ஆம் திகதி இரவுக்கும், மார்ச் 3 ஆம் திகதி இரவுக்கும் தொடர் பில்லை என்று சொன்னால் குழந்தை கூட நம்பாது. ■

> "வரும் சட்டமன்றத் தேர்தலில் அ.ம.மு.கவும், சசிகலாவும் நம்மோடு சேர்ந்தால்தான் தென் மாவட்டத்துல நம்மால வெற்றிபெற முடியும். வெளிப்படையாக சொல்றேன்... அவங்களை சேர்த்துக்கலைன்னா தேனி மாவட்டத்துல நானே வெற்றி பெறுவேனானு தெரியாது. நானே தோற்றுவிடக் கூடிய அபாயமும் இருக்கு. அதனால நாம அவங்களை கூட்டணிக்குள்ள வச்சிக்கறது நல்லது ஜீ" என்று அமித் ஷா விடம் எடுத்துச் சொல்லியிருக் கிறார் பன்னீர் செல்வம்."

## இன்று சர்வதேச பெண்கள் தினம்




# போராட்டத்தில் தோன்றி கொண்டாட்டத்தில் தொடர்கிற கதை

- ஜெனா -

இன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படும் சர்வதேசப் பெண்கள் தினம் எப்படித் தோன்றியது? நிச்சயமாக கொண்டாட்டத்தில் அல்ல போராட்டத்தில்தான் அது தொடங்கியது.

அமெரிக்கத் தொழிற்சங்க இயக்கத்துக்கும், ரஷ்யப் புரட்சி இயக்கத்துக்கும் இதில் பங்கு உண்டு.

1975 ஆம் ஆண்டுதான் இந்த நாளை சர்வதேசப் பெண்கள் தினமாக ஐ.நா. அங்கீகரித்தது. ஆனால், ஒரு நூற்றாண்டுக்கு முன்பிருந்தே இந்த நாள் பெண்களுக்கு முக்கிய நாளாக உலகின் பல பகுதிகளில் இருந்து வருகிறது.

வேலை நேரத்தை குறைக்கவும், கூலியை உயர்த்தவும் வலியுறுத்தி, வாக்களிக்கும் உரிமை கோரி 15,000 உழைக்கும் பெண்கள் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் 1908-ம் ஆண்டு மார்ச் 8-ம் தேதி ஒரு பேரணியை நடத்தினர். இந்த நாளை அடுத்த ஆண்டு தேசிய பெண்கள் தினமாக அறிவித்தது அமெரிக்க சோஷியலிஸ்ட் கட்சி.

இந்த நாளினை சர்வதேச தினமாக அனுசரிக்கவேண்டும் என்ற யோசனையை முன்வைத்தவர் கிளாரா ஜெட்கின். கோபன்ஹேகனில் 1910 ஆம் ஆண்டு நடந்த உழைக்கும் பெண்களின் சர்வதேச மாநாட்டில் இந்த யோசனையை முன்வைத்தார் கிளாரா. அந்த மாநாட்டில் 17 நாடுகளைச் சேர்ந்த 100 பெண்கள் கலந்துகொண்டனர்.

இதையடுத்து 1911 ஆம் ஆண்டு முதல் ஆஸ்திரியா, டென்மார்க், ஜேர்மனி, சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளில் பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது. இதை அடிப்டையாகக் கொண்டே 2011ஆம் ஆண்டு நூறாவது சர்வதேசப் பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது. எனவே, அந்த வகையில் இது 108 ஆவது பெண்கள் தினம்.

எனினும் 1975ஆம் ஆண்டில்தான் ஐ.நா. மார்ச் 8-ஐ சர்வதேசப் பெண்கள் தின மாக முறைப்படி அறிவித்து கொண்டாடத் தொடங்கியது. அத்துடன் ஒவ்வோர் ஆண்டின் பெண்கள் தினத்துக்கும் ஒரு முழக்கத்தையும் முன்வைத்துவருகிறது ஐ.நா. இதன்படி ஐ.நா. அறி விப்புக்குப் பின் வந்த முதல் பெண்கள் தினத்தின் முழக்கம் “சமத்துவத்தை யோசி, அறிவுபூர்வமாக கட்டியெழுப்பு, மாற்றத்துக்காக புதுமையாக சிந்தி” என்பதாகும்.

உழைக்கும் வயதில் உள்ள பெண்களில் சரிபாதி பேர்தான் உலக தொழிலாளர் தொகையில் இடம் பெற்றுள்ளார்கள் என்கின்றன ஐ.நா. புள்ளி விவரங்கள்.

சமூகம், அரசியல், பொருளியல் போன்ற துறைகளில் பெண்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தை கொண்டாடுவதற்கான நாளாக இந்த நாள் உருவெடுத்துள்ளது. ஆனால், பாலின பாகுபாட்டை எதிர்த்து உழைக்கும் பெண்கள் நடத்திய போராட்டங்கள், வேலை நிறுத்தங்களில்தான் இந்த நாளின் வரலாற்று வேர்கள் பதிந்துள்ளன.

**வடிவம் பெற்றது எப்போது?**

கிளாரா ஜெட்கின் ஒரு சர்வதேசப் பெண்கள் தினம் வேண்டும் என்ற யோசனையை முன்மொழிந்தபோது எந்த நாளில் அதைக் கொண்டாட வேண்டும் என்று குறிப்பிட்டு எந்த திகதியையும் கூறவில்லை.

முதல் உலகப் போர் நடந்து கொண்டிருந்தபோது, 1917ஆம் ஆண்டு ரஷ்யாவில் போர் வேண்டாம், “அமைதியும் ரொட்டியும்”தான் தேவை என்று வலியுறுத்தி மார்ச் 8ஆம் திகதி (ஜூலியன் நாட்காட்டியின்படி பெப்ரவரி 23) பெண்கள் போராட்டத்தைத் தொடங்கினர். நான்கு நாள்கள் நடந்த இந்தப் போராட்டம், சர்வதேச மகளிர் தினம் என்ற கருத்துக்கு உறுதியான ஒரு வடிவத்தைக் கொடுத்தது. நான்கு நாள்கள் நீடித்த இந்தப் போராட்டம் கடைசியில் ரஷ்ய முடி மன்னரான ஜார் அரியணையை விட்டிறங்குவதற்கான அழுத்தத்தை தந்தது. முடியாட்சியும் முடிவுக்கு வந்தது. முடியாட்சிக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட தற்காலிக அரசாங்கம் பெண்களுக்கு வாக்குரிமையும் அளித்தது.

இந்த மாற்றம்தான், 1917 அக்டோபரில் நடந்த புகழ்பெற்ற ரஷ்ய புரட்சிக்கும், அதன் விளைவாக உலகெங்கும் சோஷியலிஸ்ட் அரசுகள் தோன்றுவதற்கும் முன்னோட்டமாக அமைந்தது குறிப்பிடத் தக்கது.

> **ஆண்களுடன் சரிநிகர் உரிமை வேண்டி போராடும் பெண்கள் ஒருபுறம் என்றால் ஆண்கள் குடும்பத்தைக் கவனிக்காததால், குடும்பப் பணிகளைப் பகிர்ந்து கொள்ளாததால், குடும்பத்தின் பொருளாதாரத் தேவை களை எதிர்கொள்ளாததால் அதனை பூர்த்தி செய்வதற்காக தியாகிகளாகவே வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து மடியும் பெண்கள் ஏராளம். குறிப்பாக கிராமப்புற, அடித்தட்டு நிலையில் வாழும் பெண்கள் இந்தப் பிரச்சினையை அதிகமாக எதிர் கொள்கின்றனர். திருமணத்திற்கு முன்பு தந்தையாலும், பின்பு கணவனாலும் பெண் கள் சுமைதாங்கியாக மாறிய அவலம் இன்னமும் தொடர்கிறது.**



**எப்படி கொண்டாடப்படுகிறது?**

சர்வதேச பெண்கள் தினம் ரஷ்யா உள்ளிட்ட பல நாடுகளில் தேசிய விடுமுறை நாளாக உள்ளது. இந்த நாடுகளில் பெண்கள் தினத்தை ஒட்டி 3-4 நாள்களுக்கு பூக்கள் விற்பனை இருமடங்காகிறது. சீனாவில் அரசு கவுன்சில் அளித்த அறிவுரைப்படி பல இடங்களில் மார்ச் 8 அன்று பெண் ஊழியர்களுக்கு அரை நாள் விடுமுறை அளிக்கப்படுகிறது. ஆனால், எல்லா இடங்களிலும், நிறுவனங்கள் இந்த விடுமுறையை நடைமுறையில் தருவதில்லை.

இத்தாலியில் பெண்கள் தினத்தில் மிமோசா பூக்களை வழங்கும் வழக்கம் உள்ளது. அமெரிக்காவில் மார்ச் மாதம் பெண்கள் வரலாற்று மாதமாக கொண்டாடப்படுகிறது. அமெரிக்கப் பெண்களின் சாதனையை கௌரவப்படுத்தி ஒவ்வோர் ஆண்டும் அமெரிக்க அதிபர் இந்த மாதத்தில் ஒரு பிரகடனத்தை வெளியிடுகிறார்.

கடந்த சில ஆண்டுகளில், பெண்களால் முன்னெடுக்கப்படும் பல்வேறு சமூக போராட்டங்கள் எந்த அளவிற்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதை நம்மால் பார்க்க முடிகிறது. கடந்த 2017ஆம் ஆண்டு, அக்டோபர் மாதத்தில், #MeToo என்ற ஹாஷ்டேக்கை பயன்படுத்தி, தங்களின் சமூக வலைத்தளப் பக்கங்களில் பல பெண்களும் அவர்களுக்கு ஏற்பட்ட பாலியல் தொந்தரவுகளை வெளியில் சொல்ல ஆரம்பித்தார்கள்.

உலகெங்கும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் நடக் கிறது என்பதை எடுத்துக்கூறும் விதமாக இது இருந்தது.

2018ஆம் ஆண்டில், #MeToo தொடர்பாக கலந்துரையாடல்கள், உலகளவில் மாறின. இந்தியா, சீனா, பிரான்ஸ் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளில் பலர் பேசத் தொடங்கியதோடு, மாற்றம் தேவை என்ற குரலையும் எழுப்ப ஆரம்பித்தனர்.

ஆண்களுடன் சரிநிகர் உரிமை வேண்டி போராடும் பெண்கள் ஒருபுறம் என்றால் ஆண்கள் குடும்பத்தைக் கவனிக்காததால், குடும்பப் பணிகளைப் பகிர்ந்து கொள்ளாததால், குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகளை எதிர்கொள்ளாததால் அதனை பூர்த்தி செய்வதற்காக தியாகிகளாகவே வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து மடியும் பெண்கள் ஏராளம்.

குறிப்பாக கிராமப்புற, அடித்தட்டு நிலையில் வாழும் பெண்கள் இந்தப் பிரச்சினையை அதிகமாக எதிர் கொள்கின்றனர்.

திருமணத்திற்கு முன்பு தந்தையாலும், பின்பு கணவனாலும் பெண் கள் சுமைதாங்கியாக மாறிய அவலம் இன்னமும் தொடர்கிறது.

உழைக்கும் பெண்கள் மட்டுமல்லாமல் எந்த வேலைக்கும் செல்லாமல் குடும்பத்தை மட்டும் கவனிக்கும் பெண்களும் இதனைத் தினந்தோறும் கடந்தே செல்கின்றனர்.

எனவே பெண்களுக்கான உரிமை, விடுதலை, மரியாதை என்பது குடும்பத்தில் இருந்தும் தொடங்க வேண்டும். உணவு சமைப்பது, குழந்தை வளர்ப்பது உட்பட குடும்ப பொறுப்புகளை சரியான முறையில் ஆண்களும் கவனித்தால் மட்டுமே இது சாத்தியம். அதனை நோக்கி நகர்வதே முழுமையான பெண் உரிமையாக முடியும்.

சர்வதேச பெண்கள் தினம் என்பது இவர்களுக்கும் இருக்கட்டும்.

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**8**

01B. **தரப்பட்ட உருவை நிறைவு உரிய பகுதியை தெரிவு செய்தல்.**

**விளக்கமும் விடைகள்**

**2013 - 01**

பொருத்தப்பட வேண்டியதன் பகுதி மையத்தில் கால்வட்ட கறுப்புப் பாதியையும் சுற்று வட்டத்தில் அரைகறுப்புப் புள்ளியையும் ஒரு முழுவட்ட வெள்ளைப் புள்ளியையும் கொண்டிருக்க வேண்டும். அதனைப் பூர்த்தி செய்வது

**விடை 01**

**2013 - 02**

பொருத்தப்பட வேண்டியதன் பகுதி வண்ணத்துப்பூச்சியின் சிறகு. வண்ணத்துப்பூச்சியின் 4 சிறகில் டிடப்புற ஒரு சிறகு நீக்கப்பட்டுள்ளது.சமச்சீர் பற்றி சிந்திக்க வேண்டும்.வலப்புற மேற் சிறகினது கண்ணாடி எதிர விம்பமாக அமையக் கூடியது

**விடை 02**

பிள்ளைககளுக்கு தாள் ஒன்றினை எடுத்து மையினைக் கொட்டி நான்காக மடித்து பின் விரிக்கும் போது வண்ணத்துப்பூச்சியின் வடிவம் வருவதை செய்து காட்:ங்கள்.

**2013 - 18**

பொருத்தப்பட வேண்டியதன் பகுதி வட்டத்தை வெட்டி அரை வட்டங்களாக்கி காட்டப்பட்டுள்ளது.செவ்வகத்தை வெட்டி வலது இட புறங்கள் காட்டப்பட்டுள்ளது.முக்கோணத்தை வெட்டி அவ்வாறு வலது இட புறங்கள் பெற.
02 வது விடையில் வலப்புற அரைவாசியும் 03 வத் விடையில் இடப்புற அரைவாசியும தரப்பட்ட கோலத்திற்கு பொருத்தமற்றது எனவே

**விடை 01**

**2014 - 01**

சமச்சீர் பற்றி சிந்திக்க வேண்டும்.படத்தில் வலப்புறத்தில் பூரணம் இல்லாமல் உள்ளது.விடைகளில்தரப்பட்டிருக்கும் ஆப்புக்களில் தரப்படடிருக்கும் ஆப்புக்களில்தரப்பட்டிருக்கும் உருவினது இடப்புறமுள்ள பகுதிக்கு ஒப்பானது

**விடை 03**

01வதில் கோடு எதுவுமில்லை. 02வதில் கோடு எதிர்புறமாக உள்ளது.

**2014 - 02**

சமச்சீர் பற்றி சிந்திக்க வேண்டும்.படத்தில் பூரணம் இல்லாமல் உள்ளது. விடைகளில்தரப்பட்டிருக்கும் ஆப்புக்களில் 01 பொருந் தாது ஆப்புக்களில்தரப்பட்டிருக்கும் உருக்களில் 02 உம் 03 உம் ஒரே மாதிரியாக இருந்தாலும் 03 இல் கறுப்பு துண்டு பொருத்தமற்றது.எனவே

**விடை 02**

**2015 - 01**

சமச்சீர் பற்றி சிந்திக்க வேண்டும்.படத்தில் பூரணம் இல்லாமல் உள்ளது. விடைகளில்தரப்பட்டிருக்கும் ஆப்புக்களில்01 பொருந்தாது காரணம் இரண்டு கோடுகள். ஆப்புக்களில்தரப்பட்டிருக்கும் உருக்களில் 02 உம் 03 உம் ஒரே மாதிரியாக இருந்தாலும் 03 இல் கறுப்பு கோடுகள் மூன்றும் பொருத்தமற்றது. காரணம் மூன்று கோட்டு முக்கோணம் உருவாகாது. எனவே

**விடை 02**

**ஆசிரியர் அன்னமையா - 076 056 5786**

# இரணைதீவில் உடல் அடக்கம் தீர்மானத்தை கைவிடவேண்டும்

## *யாழில் கவனவீர்ப்புப் போராட்டம்*

**யாழ்ப்பாணம்,மார்ச்.08**

**கொரோனா வைரஸ் தொற்று நோயால் உயிரிழந்தோரின் சடலங்களை கிளிநொச்சி - இரணைதீவில் அடக்கம் செய் வதற்கான தீர்மானத்தை அரசாங்கம் உடன் கைவிடவேண்டும் என வலியுறுத்தி யாழ்ப்பாணம் மறைமாவட்ட கத்தோலிக்க தேவாலயங்களில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெ டுக்கப்பட்டது.**







யாழ்ப்பாணம் மரியன்னை பேராலயத்தில் நேற்றுக் காலை 6.30 மணிக்கு இந்த கவனவீர்ப்புப்போராட்டம்இடம்பெற்றது.

இதேவேளை, கத்தோலிக்க மக்கள் வாழும் இரணைதீவில், கொரோனா நோயால் உயிரிழந்தோரின் சடங்களை அடக்கம் செய்ய அரசு எடுத்த தீர்மானத்தை உடன் கைவிடவேண்டும். எமது எதிர்ப்பு முஸ்லிம் மக்களுக்கானது அல்ல என யாழ்ப்பாணம் மறைமாவட்ட குரு முதல்வர் தெரிவித்தார்.

மேலும், இஸ்லாமியரும், கத்தோலிக்கர்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றோம். மக்களின் கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்க்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இதேபோன்று, அனைத்து கத்தோலிக்க ஆலயங்களிலும் வெவ்வேறு நேரங்களில் இவ்வாறான கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. (எ)




ஐக்கிய நாடுகள் சபையின் 46ஆவது மனித உரிமைக் கூட்டத்தொடர் இடம்பெற்று வரும் நிலையில், தமிழினப் படுகொலைக்கு நீதி கோரியும், அனைத்துலக சுயாதீன விசாரணையை வலியுறுத்தியும் ஐ.நா. முன்பு மாபெரும் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ஏற்பாட்டில் சுவிஸிலுள்ள ஈழத் தமிழர்கள் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.



## சுற்றுலாப்பயணிகள் வருகை பெப்ரவரி மாதம் அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச்.08

நாட்டில் இந்த வருடத்தில் கடந்த ஜனவரி மாதத்தைவிட பெப்ரவரி மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதத்தில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையானது ஆயிரத்து 682 ஆக காணப்பட்டுள்ளது.

எனினும் கடந்த பெப்ரவரி மாதத்தில் நாட்டிற்கு வருகைத் தந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையானது 3 ஆயிரத்து 366 ஆக அதிகரித்துள்ளதாக அந்தச் சபை தெரிவித்துள்ளது.

எவ்வாறிருப்பினும் 2020 ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் ஜனவரி மாதத் தில் சுற்றுலாப்பயணிகளின் வருகையானது 99.3 வீதத்தினாலும், பெப்ரவரி மாதத்தில் 38 வீதத்தாலும் வீழ்ச்சியடைந்துள்ளது என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (எ)

# தமிழ், முஸ்லிம் அடிப்படைவாதம் தலைதூக்க அரசு இடமளிக்காது

## ஜனாதிபதி கோட்டாபய திட்டவட்டம்



குருநாகல், மார்ச்08

**தமிழ் அடிப்படைவாத - பிரிவினைவாத பயங்கரவாதமும், முஸ் லிம் மதவாத அடிப்படைவாதமும் மீண்டும் தலைதூக்க அர சாங்கம் இடமளிக்காது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

கிராமத்துடன் கலந்துரையாடல் வேலைத்திட்டத்தின் மற்றொரு கட்டம் குருநாகல் - கிரிபாவ வேரகலவில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஏப்ரல் - 21 தாக்குதலுக்கு அப்போது ஆட்சியில் இருந்த அரசாங்கமும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுமே பொறுப்புக்கூற வேண்டும்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படாததால், இவ்வாறான நிலைஏற்பட்டமை ஆணைக்குழுவின் அறிக்கையில் தெளிவாகிறது.

இலங்கையில் நூற்றுக்கும் மேற்பட்ட ஐ.எஸ் ஆதரவாளர்கள் இருப்பதுடன், ஐ.எஸ் தெற்காசியாவில் காட்டுத் தீ போல் பரவுவதாகவும் முற்போக்காக இருப்பதை விட செயல்திறன் மிக்கதாக இருக்க வேண்டும் எனவும் அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், இன மற்றும் மத முரண்பாட்டை தூண்டுவதை தடுப் பதற்கு சட்ட வரையறை தயாரிக்கப்பட வேண்டியதன் தேவையும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனினும் துரதிர்ஷ்டவசமாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசாங்கம் அதனை செய்யத் தவறிவிட்டதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் தமிழ் அடிப்படைவாத, பிரிவினைவாத பயங்கரவாதமும் இஸ்லாம் மதவாத அடிப்படைவாதமும் தலைதூக்க அரசாங்கம் இடமளிக்காது.

தற்போது தாம் அதிகாரத்தில் இருப்பதால், தவறிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டிய பொறுப்பு தமக்கு இருப்பதாகவும் ஈஸ்டர் தாக்குதலை விற்று தாம் அதிகாரத்துக்கு வரவில்லை எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (எ)

# 12 வருடங்கள் கடந்துள்ள போதும் கொலைக்கு நீதி கிடைக்கவில்லை

## லசந்தவின் மகள் குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 08

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்டு 12 வருடங்கள் கடந்துள்ள போதிலும் நீதி நிலை நாட்டப்படுவதை இலங்கை அரச தலைவர்கள் தொடர்ந்தும் நிராகரித்து வருகின்றனர் என அவரின் மகள் அஹிம்சா விக்கிரமதுங்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பத்திரிகையொன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தனது தந்தை, ஜமால்கஷோக்ஜி ஆகியோரின் கொலைகளைப் பார்க்கும்போது ஊடகவியலாளர்களை படுகொலை செய்வது உலகில் அதிகரித்து வரும் சர்வாதிகாரத்தின் மற்றுமொரு விம்பமாகத் தெரிவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

‘இலங்கை பத்திரிகையொன்றின் ஆசிரியராக பணியாற்றிய சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க 2009ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி காலை தனது அலுவலகத்துக்கு சென்று கொண்டிருந்த போது அத்திட்டிய பகுதியில் படுகொலை செய்யப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவரை பின்தொடர்ந்து, கொலை செய்ததாக முதலில் தெரிவிக்கப்பட்டது.

எனினும், கொலை செய்யப்பட முன்னர், தனது காரிலிருந்த குறிப்பு புத்தகத்தில் தன்னை பின்தொடரும் மோட்டார் சைக்கிளின் இலக்கத்தை, லசந்த விக்ரமதுங்க எழுதியிருந்ததாக விசாரணைகளின்போது தெரியவந்தது.

இந்த கொலைச்சம்பவம் இடம்பெற்று சில வாரங்களுக்கு பின்னர் சர்ச்சைக்குரிய மேலும் சில சம்பவங்கள் பதிவாகின.

2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வவுனியா செட்டிக்குளம் பிரதேசத்தில் கடத்தப்பட்ட இரண்டு இளைஞர்களின் தீக்கிரையாக்கப்பட்ட சடலங்கள் அநுராதபுரம் கம்மிரிஸ் கஸ்வௌ பிரதேசத்தில் கண்டு பிடிக்கப்பட்டன.

அதன் பின்னர் லசந்த விக்கிரமதுங்கவை கொலை செய்வதற்கு வந்ததாக சந்தேகிக்கப்படும் மோட்டார் சைக்கிளொன்று அத்திட்டிய சதுப்பு நிலமொன்றிலிருந்து மீட்கப்பட்டது.

விசாரணை இடம்பெற்றுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் லசந்த விக்ரமதுங்கவின் சாரதியும் கடத்திச் செல்லப்பட்டதுடன் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

கல்கிசை பொலிஸார் முதலில் கிடைத்த தகவல்களின் பிரகாரம் விசாரணைகளை ஆரம்பித்தாலும் அது வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவது தென்படவில்லை.

அதன் பின்னர், குற்றப்புலனாய்வு திணைக்களம் லசந்த விக்ரமதுங்கவின் கொலைச்சம்பவம் தொடர்பிலான விடயங்களை வெளிப்படுத்தி வந்த வேளையில், அந்த விசாரணை திடீரென பொலிஸ் பயங்கரவாத விசாரணை பிரிவிற்கு மாற்றப்பட்டது.

சில சந்தர்ப்பங்களில் இராணுவத்தின் சிலரும் இந்த சம்பவங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டாலும் லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பில் உரிய சந்தேகநபர்கள் இதுவரை பெயரிடப்படவில்லை.

இந்நிலையில், சாட்சியங்களை மறைத்த குற்றச்சாட்டில் இந்த கொலைச்சம்பவம் இடம்பெற்ற காலத்தில்கல்கிசை பொலிஸ் நிலைய குற்றப்பிரிவின் பொறுப்பதிகாரி மற்றும் அவ்வேளையில் அந்த பிரதேசத்திற்கு பொறுப்பாகவிருந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர். அந்த அதிகாரிகளும் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

லசந்த விக்கிரமதுங்கவின் கொலைச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் 3 அதிகாரிகள் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டனர்.

ஷானி அபேசேகர தற்போது விளக்கமறியலில் உள்ளதுடன், உதவி பொலிஸ் அத்தியட்சகர் சிசிர திசேராவுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு அரசியல் தஞ்சம் கோரி பொலிஸ் அதிகாரி நிஷாந்த டி சில்வா நாட்டிலிருந்து தப்பிச்சென்றார்.

லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பிலான வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி கல்கிசை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

தமக்கு தொடர்ந்தும் நீதி கிடைக்காத நிலையில், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டுக்கு இது தொடர்பில் எழுத்து மூலம் அறிவித்துள்ளேன்’ என அஹிம்சா விக்கிரமதுங்க தெரிவித்துள்ளார்.

# யாழ்.நகரில் வீடு புகுந்து கும்பல் அட்டூழியம்!

யாழ்ப்பாணம், மார்ச்.08

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த கும்பல் அட்டூழியத்தில் ஈடுபட்டு தப்பியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிள்களில் வந்த ஐந்துக்கும் மேற்பட்டோர் வீடு புகுந்து பெறுமதியான தளபாடங்களை அடித்துச் சேதப்படுத்தியும் தீ வைத்தும் அட்டூழியத்தில் ஈடுபட்டுவிட்டுத் தப்பித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ)



செய்திகளை உடனுக்குடன் அறிந்துகொள்ள
உங்கள் கைபேசிகளில்
ஈழநாடு APP ஐ
APP இல் eelanadu
Google Play என்று தேடி
Download செய்யுங்கள்




## தடுப்பூசியைப் பெற்றார் திபெத்தின் தலாய் லாமா

புதுடில்லி, மார்ச் 08

திபெத்தின் மிக உயர்ந்த ஆன்மீகத் தலைவரான தலாய் லாமா கொவிட் - 19 தடுப்பூசியை பெற்றுக் கொண்டார். அத்துடன் ஏனையவர்களையும் தடுப்பூசியை பெறவும் ஊக்கப்படுத்தினர்.

‘சில கடுமையான சிக்கல்களைத் தடுப்பதற்காக, இந்த ஊசி மிகவும் உதவியாக இருக்கும்” என்று 85 வயதான அவர், வட இந்திய நகரமான தர்மசாலாவில் உள்ள ஒரு மருத்துவமனையில் நேற்று முன்தினம் தடுப்பூசி பெற்ற பின்னர் கூறினார்.

அத்துடன், இந்த ஊசி எடுக்க அதிகமான மக்களுக்கு தைரியம் இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

தலாய் லாமாவின் இல்லத்தில் வசிக்கும் மேலும் பத்து பேருக்கும் தடுப்பூசி போடப்பட்டதாக வைத்தியசாலை அதிகாரிகள் உறுதிபடுத்தியுள்ளனர்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் மற்றும் இங்கிலாந்தை தளமாகக் கொண்ட மருந்து தயாரிப்பாளரான அஸ்ட்ராஜெனெகா ஆகியோரால் உருவாக்கப்பட்ட தடுப்பூசியே இந்த பதினொருவருக்கும் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

### கொரோனா தடுப்பூசி:

## காப்புரிமை இரத்து கோரிக்கைக்கு பைடனின் கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு

வாஷிங்டன், மார்ச் 08

கொரோனா பரவல் தடுப்பு சார் கண்டுபிடிப்புகளின் காப்புரிமை இரத்து செய்யப்பட வேண்டும் என்று உலக வர்த்தக மையத்தில் இந்தியா மற்றும் தென்னாபிரிக்க நாடுகள் கோரியுள்ளன.

ஆனால், இந்தக் கோரிக்கையை ஏற்கக்கூடாது என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு அவரின் கட்சியை சேர்ந்த நான்கு முக்கிய செனட்டர்கள் அழுத்தம் கொடுத்து வருகின்றனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் ஜோ பைடனுக்கு செனட்டர்கள் அனுப்பி வைத்த கடிதத்தில்,

“கொரோனா தொற்றுப் பரவலைத் தடுக்கும் கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை வழங்க வேண்டாம் எனவும், இதன்மூலம் அவற்றின் உற்பத்தி மற்றும் விநியோகத்தை ஊக்குவிக்கலாம் எனவும் இந்தியாவும் தென்னாபிரிக்காவும் உலக வர்த்தக மையத்திடம் கோரிக்கை வைத்துள்ளன. அவர்களின் கோரிக்கையை ஏற்று கண்டுபிடிப்புகளின் காப்புரிமையை இரத்து செய்தால், அமெரிக்க நிறுவனங்களால்



உருவாக்கப்பட்ட தயாரிப்புகளை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் திடீரென்று அதிகரித்துவிடுவார்கள்.

மேலும், “அமெரிக்க நிறுவனங்களின் கண்டுபிடிப்புகளுக்கான காப்புரிமையை இரத்து செய்வதன் மூலம் தாங்கள் பயனடையலாம் என்று பிற நாடுகள் நம்புகின்றன. ஆனால், காப்புரிமையை இரத்து செய்வதன் மூலம் கண்டுபிடிப்புகளுக்கான உத்வேகம் மட்டுப்படும். புதிய கண்டுபிடிப்புகளுக்கான முயற்சிகள் நிறுத்தப்படும் அபாயமும் உள்ளது” என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

“தற்போது மீண்டும் கொரோனா பரவல் அதிகரித்துள்ள நிலையிலும், கொரோனா தொடர்ந்து உருமாற்றம் பெற்றுவரும் நிலையிலும் தடுப்பூசிகள் மற்றும் மருத்துவ சிகிச்சைகளுக்கான ஆராய்ச்சிகளும் கண்டுபிடிப்புகளும் தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

“காப்புரிமை இரத்து செய்யப்பட்டு யாரும் உற்பத்தி செய்யலாம் என்ற நிலையை உண்டாக்கினால் நோய் காக்கும் தடுப்பூசிகளின் தரம் குறித்த அச்சமும் உண்டாகும். கொரோனா பரவலைத் தடுப்பதில் தொடர்ந்து அனைத்து நாடுகளுக்கும் உதவிகளை அமெரிக்கா மேற்கொண்டு வருகிறது. அப்படியிருக்க அமெரிக்க கண்டுபிடிப்புகளின் காப்புரிமையை இரத்து செய்வதை ஒப்புக்கொள்வது கொரோனா பரவலை தடுப்பதில் எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கே எதிரானதாக மாறிவிட வாய்ப்புள்ளது. எனவே இந்த கோரிக்கைக்கு அமெரிக்கா ஒப்புக் கொள்ளக் கூடாது”, என்று வலியுறுத்தியுள்ளனர். (ஐ)

## மியன்மாரில் பத்திரிகையாளர்கள் கைது விடுதலை செய்யுமாறு வலியுறுத்தல்!

மியன்மார் போராட்டம் குறித்து செய்தி வெளியிட்டதால் கைது செய்யப்பட்ட பத்திரிகையாளர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று பத்திரிகையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இது குறித்து அமெரிக்காவில் இயங்கும் பத்திரிகையாளர்கள் சங்கம்தரப்பில்,

“அனைவரையும் எங்கள் பிரசாரத்தில் கலந்துகொள்ள கேட்டுக் கொள்கிறோம். இதழியல் என்பது குற்றச் செயல் அல்ல. மியன்மாரில் இராணுவத்துக்கு எதிராக நடந்த போராட்டத்தைப் பதிவு செய்ததால் கைது செய்யப்பட்ட தெய்ன் ஸா உள்ளிட்ட 5 பத்திரிகையாளர்கள் விடுவிக்கப்பட வேண்டும்” என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கைது செய்யப்பட்ட தெய்ன் ஸா உள்ளிட்ட பத்திரிகையாளர்கள் பொது சட்ட விதிகளை மீறினர் என்று குற்றம் சுமத்தப்பட்டு, 3 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், மியன்மார் இராணுவத்துக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மியன்மாரில் இளம் போராட்டக்காரர்கள் தங்களது எதிர்ப்பைத் தீவிரப்படுத்தி வருகின்றனர்.(ஐ)



## நம்பிக்கை வாக்கெடுப்பில் வென்றார் இம்ரான் கான்!

இஸ்லாமாபாத், மார்ச் 08

பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் நடத்தப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பில் இம்ரான் கான் தலைமையிலான அரசாங்கம் வெற்றி பெற்றுள்ளது.

அங்கு,“பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப்” கட்சி தலைமையிலான ஆட்சி நடக்கிறது.? முன்னாள் கிரிக்கெட் வீரரான இம்ரான்கான் பிரதமராக உள்ளார்.

இவரது அரசுக்கு எதிராக 11 எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து பாகிஸ்தான் ஜனநாயக இயக்கம் என்கிற பெயரில் கூட்டணி அமைத்து செயல்படுகின்றன.

இந்த நிலையில் அங்கு அண்மையில் நடைபெற்ற செனட் சபை (பாராளுமன்ற மேலவை) தேர்தலில், ஆளும் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சியின் வேட்பாளரும், நிதி அமைச்சருமான அப்துல் ஹபீஸ் ஷேக்கை, பாகிஸ்தான் ஜனநாயக இயக்கம் கூட்டணி வேட்பாளரும் முன்னாள் பிரதமருமான யூசூப் ராஸா கிலானி தோற்கடித்தார். இந்த தோல்வி, பிரதமர் இம்ரான் கான் அரசுக்கு பெரும் பின்னடைவாக பார்க்கப்பட்டது.

இதையடுத்து, இந்த தோல்விக்கு பொறுப்பேற்று பிரதமர் இம்ரான் கான் பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் நெருக்கடி கொடுத்தன. இதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தின் கீழவையில் தனது அரசு மீது நம்பிக்கை வாக்கெடுப்புக்கு இம்ரான் கான் அழைப்பு விடுத்தார்.

நேற்றுமுன்தினம் நடந்த சிறப்பு அமர்வில் சபாநாயகர் அசாத் கைசர் நம்பிக்கை தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்தினார். பாகிஸ்தான் ஜனநாயக கூட்டணி உறுப்பினர்கள் இதனைப் புறக்கணித்து வெளிநடப்பு செய்தனர்.

இதைத் தொடர்ந்து 342 பேர் கொண்ட கீழவையில், 178 உறுப்பினர்கள் நம்பிக்கை தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதன் மூலம் பெரும்பான்மைக்கு 172 வாக்குகள் தேவை என்ற நிலையில் அதை விட கூடுதலான ஆதரவுடன் இம்ரான் கான் அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் வென்றது. (ஐ)

## சீன ஆதரவாளர்கள் மட்டுமே ஹொங்கொங் தேர்தலில் போட்டி!

### புதிய சட்ட வரைவு சமர்ப்பிப்பு

பீஜிங், மார்ச் 08

ஹொங்கொங் தேர்தல்களில் சீன ஆதரவாளர்கள் மட்டுமே போட்டியிட வழிவகுக்கும் வகையில் சட்ட திருத்தம் செய்வதற்கான வரைவு சீனாவின் பாராளுமன்ற கூட்டத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஏ.பி. செய்தி நிறுவனம் வெளியிட்ட தகவலில், சீனாவில் ஆண்டுதோறும் நடைபெறும் தேசிய பாராளுமன்றக் கூட்டம் தலைநகர் பீஜிங்கில் கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கியது.

இதில், ஹொங்கொங் தேர்தல் தொடர்பான புதிய வரைவு சமர்ப்பிக்கப்பட்டது. இதில், ‘தேசபக்தர்கள்’ மட்டுமே ஹொங்கொங் மாகாண தேர்தலில் போட்டியிட முடியும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், அந்த மாகாணத்தில் தலைமை நிர்வாகியை தெரிவு செய்யவும் சீன ஆதரவு தேர்தல் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், அந்தக்



குழுவால் நேரடியாக தெரிவு செய்யப்படும் பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிரித்தல் போன்ற விடயங்களும் உள்ளடங்கி உள்ளன.

பிரிட்டனின் ஆளுகைக்கு கீழிருந்த ஹொங்கொங், 1997இல் சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டது. சுயாட்சி பிராந்தியமாக இருந்த அந்த மாகாணத்தின் மீது அண்மைக் காலமாக சீனா அடக்குமுறைகளை பிரயோகித்து வருகின்றது. இதற்கு எதிராக ஹொங்கொங் மக்கள் ஜனநாயக போராட்டங்களை அதிகரித்து வருகின்றனர். இதற்கு அந்த மாகாண அரசும் ஆதரவு தெரிவித்திருந்தது.

இந்நிலையிலேயே, ஹொங்கொங் தொடர்பில் புதிய சட்டத் திருத்தங்களை சீனா வரைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஆஸியுடனான இருபது - 20:

# தொடரை வென்றது நியூஸிலாந்து அணி



வெலிங்டன், மார்ச் 08

அவுஸ்திரேலிய அணியை 7 விக்கெட்களால் வெற்றி கொண்டதன் மூலம் இருபது -20 தொடரைக் கைப்பற்றியது நியூஸிலாந்து அணி.

நியூஸிலாந்துக்கு சுற்றுப் பயணம் சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி 5 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் விளையாடி வருகின்றது. 2-2 என்று சமநிலையுடன் இருந்த இரு அணிகளும் வெற்றி - தோல்வியை தீர்மானிக்க நேற்றைய போட்டியில் களமிறங்கின.

வெலிங்டனில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

தொடக்கம் கொடுத்த ஜோஸ் பிலிப்பே 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அரோன் பின்ஞ், மத்தியூ வேட் ஆகியோர் ஓரளவுக்கு போராடினார். இதனால் அணியின் ஓட்ட எண்ணிக்கை அதிகரித்தது.

பின்ஞ் 5 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 36 ஓட்டங்களை எடுத்தார். வேட் 3 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 44 ஓட்டங்களை பெற்றார். இதன் பின்னர் வந்த வீரர்களில் ஸ்ரொய்னிஸ் மட்டுமே 26 ஓட்டங்களை அதிகபட்சமாக எடுத்தார். 20 ஓவர்கள் நிறைவில் அவுஸ்திரேலிய அணி 8 விக்கெட்கள் இழப்புக்கு 142 ஓட்டங்களைக் குவித்தது.

நியூஸிலாந்தின் பந்துவீச்சில் சோதி 3 விக்கெட்களையும், சௌதி, போல்ட் ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணிக்கு டெவன் கொன்வே, மார்ட்டின் குப்தில் இணை தொடக்கம் கொடுத்தது. சிறப்பான ஆரம்பத்தை இந்த இணை ஏற்படுத்தியது.

கொன்வே 3 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 36 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த வில்லியம்ஸன் முதல் பந்திலேயே ஓட்டம் எதனையும் எடுக்காமலே றிச்சர்ட்சனின் பந்தில் மார்ஸிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்நிலையில், 7 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களை விளாசிய குப்தில் 71 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த பிலிப்ஸ் 5 பௌண்ட்ரிகள் 2 சிக்ஸர்களுடன் 34 ஓட்டங்களைக் குவித்தார். இதனால் 15.3 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 143 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்களால் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சில் மெரடித் 2 விக்கெட்களையும், றிச்சர்ட்சன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக குப்திலும், தொடரின் நாயகனாக சோதியும் தெரிவாகினர். (ஐ)



## தாய்மண்ணில் தொடர்ச்சியாக 13 தொடர்களில் இந்தியா வெற்றி

புதுடில்லி, மார்ச் 08

இங்கிலாந்துக்கு எதிரான தொடரை 3 -1 என்ற கணக்கில் வென்றதன் மூலம் 13 டெஸ்ட் தொடர்களை தாய்நாட்டில் தொடர்ச்சியாக கைப்பற்றி இந்தியா சாதனை படைத்துள்ளது.

2012-13 ஆம் ஆண்டில் இருந்து தற்போது வரை சொந்த மண்ணில் இந்தியா டெஸ்ட் தொடரை இழக்கவில்லை. கடைசியாக 2012-13இல் இந்திய அணி இங்கிலாந்துக்கு எதிராக சொந்த மண்ணில் டெஸ்ட் தொடர் 1-2 என்ற கணக்கில் தோற்றது.

இதன்பிறகு விளையாடிய தொடர்களில் தொடர்ச்சியாக 13 டெஸ்ட் தொடர்களைக் கைப்பற்றி இந்தியா சாதித்துள்ளது.

அவுஸ்திரேலியாவை 4-0 என்ற கணக்கிலும் (2012-13), மேற்கிந்தியத் தீவுகளை 2-0 என்ற கணக்கிலும் (2013-14), தென்னாபிரிக்காவை 3-0 என்ற கணக்கிலும் (2015-16), நியூஸிலாந்தை 3-0 என்ற கணக்கிலும் (2016-17), இங்கிலாந்தை 4-0 என்ற கணக்கிலும் (2016-17), பங்களாதேஷை 1-0 என்ற கணக்கிலும் (2016-17), அவுஸ்திரேலியாவை 2-1 என்ற கணக்கிலும் (2016-17), வீழ்த்தியது.

இதைத்தொடர்ந்து இலங்கையை 1-0 என்ற கணக்கிலும் (2017-18), ஆப்கானிஸ்தானை 1-0 என்ற கணக்கிலும் (2018), மேற்கிந்தியத் தீவுகளை 2-0 என்ற கணக்கிலும் (2018-19), தென்னாபிரிக்காவை 3-0 என்ற கணக்கிலும் (2019-20), பங்களாதேஷை 2-0 என்ற கணக்கிலும் (2019-20), தற்போது இங்கிலாந்தை 3-1 என்ற கணக்கிலும் (2020-21) தோற்கடித்தது.

அவுஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள், இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, பங்களாதேஷ் ஆகிய அணிகளை இரு முறையும், இலங்கை, நியூஸிலாந்து ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளை ஒருமுறையும் இந்தியா வீழ்த்தியுள்ளது. கிரிக்கெட் வரலாற்றில் தாய்நாட்டில் தொடர்ச்சியாக அதிக போட்டிகளை வென்ற அணி என்ற பெருமையையும் இந்தியா பெற்றுள்ளது.

## ஐ.பி.எல். இருபது - 20: ஏப்ரல் 9இல் ஆரம்பம்

புதுடில்லி, மார்ச் 08

2021 ஐ.பி.எல் இருபது - 20 கிரிக்கெட் தொடர் எதிர்வரும் ஏப்ரல் 9ஆம் திகதி தொடங்கவுள்ளது என்று இந்திய கிரிக்கெட் சபையின் (பி.சி.சி.ஐ.) வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியா- இங்கிலாந்து இடையிலான ஒரு நாள் கிரிக்கெட் தொடர் மார்ச் 28-ஆம் திகதி முடிவடைகிறது. இதைத் தொடர்ந்து ஏப்ரல் 9ஆம் திகதி ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியை தொடங்கி, மே 30-ஆம் திகதி முடிவடையவுள்ளது. போட்டி நடைபெறும் திகதி மற்றும் மைதானங்கள் உள்ளிட்ட அனைத்து விடயங்களும் அடுத்த வாரம் நடைபெறவுள்ள ஐ.பி.எல். ஆட்சி மன்ற குழு கூட்டத்தில் இறுதி செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

சென்னை, டில்லி, கொல்கத்தா, அஹமதாபாத், பெங்களூர் ஆகிய நகரங்களில் ஐ.பி.எல். தொடர் நடக்கும் என்று தெரிகிறது. முன்னதாக மும்பையில் மட்டுமே ஐ.பி.எல் தொடரை நடத்த திட்டமிடப்பட்டது. ஆனால், அங்கு இப்போது கொரோனா வேகமாக பரவி வருவதால், அந்த முடிவில் இருந்து பி.சி.சி.ஐ. பின் வாங்கியுள்ளது என்று அறிய வருகின்றது. (ஐ)

முன்னாள் ஜாம்பவான்களின் ரி-20

## மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்தியது இலங்கை



ராஜ்பூர், மார்ச் 08

மேற்கிந்தியத்தீவுகள் லெஜண்ட்ஸ் அணிக்கு எதிரான இருபது - 20 போட்டியில் இலங்கை லெஜண்ட்ஸ் அணி 5 விக்கெட்களால் வெற்றி பெற்றது.

இந்தியா, இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள், பங்களாதேஷ், அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் முன்னாள் கிரிக்கெட் ஜாம்பவான்கள் களம் காணும் வீதி பாதுகாப்பு உலக இருபதுக்கு : 20 சம்பியன்ஷிப் போட்டி இந்தியாவில் ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது.

இதில் நேற்றுமுன்தினம் இரவு ராஜ்பூர் மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் பிரைன் லாரா தலைமையிலான மேற்கிந்தியத்தீவுகள் லெஜண்ட்ஸ் அணியினரும், திலகரட்ண டில்ஷான் தலைமையிலான இலங்கை லெஜண்ட் அணியினரும் மோதினர். முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்களை இழந்து 157 ஓட்டங்களை குவித்தனர்.

மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பில் லாரா 49 பந்துகளில் 8 பௌண்ட்ரிகள் அடங்கலாக 53 ஓட்டங்களுடனும், டுவைன் ஸ்மித் 27 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 4 பௌண்ட்ரிகள் அடங்கலாக 47 ஓட்டங்களையும் அதிகபடியாக பெற்றனர்.

158 ஓட்டம் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை, 19 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அணி சார்பில் திலகரட்ண டில்ஷான் 37 பந்துகளில் 8 பௌண்ட்ரிகள் அடங்கலாக 47 ஓட்டங்களையும், உபுல் தரங்க 35 பந்துகளில் 8 பௌண்ட்ரிகள் அடங்கலாக 53 ஓட்டங்களையும் அதிகபடியாக பெற்றனர்.

இந்த வெற்றியின் மூலம் வீதி பாதுகாப்பு உலக இருபதுக்கு : 20 சம்பியன்ஷிப் போட்டி புள்ளிப் பட்டியலில் இலங்கை அணி 8 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.

இதேநேரம் இந்தியா முதலாவது இடத்திலும், தென்னாபிரிக்கா மூன்றாவது இடத்திலும், அவுஸ்திரேலியா நான்காவது இடத்திலும், மேற்கிந்தியத்தீவுகள் ஐந்தாவது இடத்திலும், பங்களாதேஷ் ஆறாவது இடத்திலும் உள்ளன.

இறுதி இடத்தில் இருக்கும் இங்கிலாந்து அணி இன்னும் எதிவித போட்டிகளையும் எதிர்கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)




## கட்டார் ரென்னிஸ்: கிவிட்டோவா சம்பியன்!

டோஹா, மார்ச் 08

கட்டார் சர்வதேச ரென்னிஸ் போட்டியில் பெட்ரோ கிவிட்டோவா சம்பயன் வென்றார்.

கட்டார் சர்வதேச ரென்னிஸ் போட்டி கடந்த 27ஆம் திகதி டோஹாவில் ஆரம்பமானது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதி யாட்டம் நேற்று முன்தினம் நடந்தது.

இதில், ஸ்பெய்னின் முகுருஷாவை எதிர்த்து செக் குடியரசின் பெட்ரோ கிவிட்டோவா விளையாடினார்.

விறுவிறுப்பாக ஆட்டம் ஆரம்பமானபோதும், 6-2, 6-1 என்ற செற் கணக்கில் கிவிட்டோவா இலகு வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை தனதாக்கினார். (ஐ)

ஈழநாடு



# ‘ஈஸ்டர் தின தாக்குதல் நன்கு திட்டமிடப்பட்ட மனிதப் படுகொலை’

## கொழும்பு தேவாலயத்தில் நேற்று போராட்டம் பேராயர், பிக்குகள் உட்பட பலர் பங்கேற்பு!

கொழும்பு,மார்ச்08

**‘ஈஸ்டர் தாக்குதல் நன்கு திட்டமிடப்பட்ட மனிதப் படுகொலை’ என்று கறுப்பு ஞாயிறு தினத்தை அடையாளப்படுத்தும் வகையில் கொழும்பு கொச்சிக்கடை தேவாலயத்தில் நேற்றுக் காலை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**





இந்தப் போராட்டத்தில் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையுடன் இணைந்து பௌத்த பிக்குகளும் பங்கேற்றனர்.

போராட்டத்தில் பங்கேற்றவர்கள் கறுப்பு ஆடைகள் அணிந்திருந்தனர்.

‘உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இது கைதேர்ந்த ஒருவரால் திட்டமிடப்பட்ட மனிதப் படுகொலை, இதில் நேரடியாக தொடர்புடையவர்களுக்கும் கடமைகளைத் தவறவிட்டவர்களுக்கும் சட்டம் நீதி வழங்கட்டும்’ என்ற வாசகம் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கையில் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற மிகவும் கொடூரமான தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுடன்நேரடித்தொடர்புடையவர்களை சட்டத்தின் முன்பு நிறுத்துவதற்கு வலியுறுத்தி கத்தோலிக்க சபை அறிவித்துள்ள ‘கறுப்பு ஞாயிறு’ தினம் நேற்று நாடளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டதோடு, பல இடங்களிலும்போராட்டங்களும்முன்னெடுக்கப்பட்டன.

(எ)



# ஒருவருக்கு கொரோனா மதுபானசாலை மூடல்

தலவாக்கலை,மார்ச்.08

தலவாக்கலை நகர மத்தியில் அமைந்துள்ள மதுபான விற்பனை நிலையத்தை கொட்டகலை சுகாதாரப் பிரிவினர் நேற்று தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தினர்.

இந்த மதுபான விற்பனை நிலையத்துக்கு நேற்று முன்தினம் தலவாக்கலை பகுதியைச் சேர்ந்த ஒருவர் சென்று அங்கிருந்து மதுபானம் அருந்திச் சென்றுள்ளார்.

அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்தே இந்த மதுபான விற்பனை நிலையம் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டது.

இதனையடுத்து நான்கு பேர் தனிமைப்படுத்தப்பட்டனர். அவருடன் தொடர்பைப் பேணியவர்கள் விபரமும் திரட்டப்பட்டு வருகின்றன.

இந்த மதுபான விற்பனை நிலையம் தலவாக்கலை நகரில் சுற்றுவட்டத்துக்கு முன்பாக அமைந்திருக்கின்றது.

மேலும், இந்த கொரோனா தொற்றாளர் தலவாக்கலை நகரிலுள்ள உடற்பயிற்சி நிலையத்துக்கும் சென்றுள்ளார். இதனால் மேற்படி உடற்பயிற்சி நிலையமும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டது.

இதனையடுத்து, தலவாக்கலை நகரில் பல இடங்களிலும் நேற்று தொற்று நீக்கி தெளிக்கப்பட்டு தொற்று நீக்கம் செய்யப்பட்டது. (எ)

# ஆளும்தரப்புக்குள் முரண்பாடு கட்சிக் கூட்டத்தில் அவதானம்

## சாகர காரியவசம் தகவல்

கொழும்பு, மார்ச்.08



பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணிக்குள் நிலவும் கருத்து முரண்பாட்டைக் கொண்டு ஒரு தரப்பினர் அரசாங்கத்தைப் பலவீனப்படுத்த முயற்சிக்கிறார்கள். இவ்விடயம் தொடர்பில் அடுத்த வாரம் இடம் பெறவுள்ள கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தில் கவனம் செலுத்தவுள்ளோம் என பெரமுனவின் பொதுச்செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரிய வசம் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: பொதுஜன பெரமுன அனைத்துப் பங்காளிக் கட்சிகளையும் ஒன்றிணைத்து சிறிலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியை உருவாக்கியது. ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் கூட்டணியாக ஒன்றிணைந்து தேர்தலில் போட்டியிட்டு மக்கள் ஆணையை பெற்றுக்கொண்டோம். பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நாட்டு மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை உருவாக்கினர்.

நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமாயின் கூட்டணியில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் கூட்டுப் பொறுப்புடன் செயல்பட வேண்டும். பல்வேறு கொள்கையைக் கொண்டுள்ள அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டணியமைத்துள்ள போது கருத்து முரண்பாடுகள் தோற்றம் பெறுவது இயல்பானதொரு விடயம். முரண்பாடுகளுக்கு உள்ளக மட்ட பேச்சுக்கள் ஊடாக மாத்திரமே தீர்வைக் காண முடியும்.

கூட்டணியின் உள்ளகப் பிரச்னைகளை பொது இடங்களில் பகிரங்கப்படுத்துவதால் முரண்பாடுகள் மாத்திரமே தோற்றம் பெறும். அமைச்சர் விமல் வீரவன்சவின் செயல்பாடுகளை கடந்த காலங்களில் சுட்டிக் காட்டினோம். இவருக்கும் எமக்கும் இடையில் தனிப்பட்ட முரண்பாடுகள் ஏதும் கிடையாது. கூட்டணியில் கூட்டுப் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினோம்.

பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணிக்குள் எழுந்துள்ள முரண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு தரப்பினர் அரசாங்கத்தை பலவீனப் படுத்த முயற்சிக்கிறார்கள். இவ்விடயம் தொடர்பில் எதிர்வரும் வாரம் இடம்பெறவுள்ள கட்சித் தலைவர் கூட்டத்தில் உரிய கவனம் செலுத்தப்படும். கூட்டணி பலமாக இருந்தால் மாத்திரமே அரசாங்கத்தை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியும். ஆளும் கூட்டணியையும், அரசாங்கத்தையும் ஒருபோதும் பலவீனப்படுத்த இடமளிக்க முடியாது- என்றார். (எ)

# பொலிஸார் சிறப்பு நடவடிக்கை; ஒன்பது வெளிநாட்டினர் கைது!

கொழும்பு, மார்ச்.08

கொழும்பு நகரத்திலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு சோதனை நடவடிக்கையின் போது ஒன்பது வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்என பொலிஸார்தெரிவித்தனர்.

நைஜீரியாவைச் சேர்ந்த மூவர், மாலைதீவைச் சேர்ந்த நால்வர், மற்றும் இந்தியர்கள் இருவரே இவ்வாறு கல்கிஸை, மொரட்டுவை, தெஹிவளை, கிராண்ட்பாஸ், கொம் பனித் தெரு ஆகிய பகுதிகளில் கைதுசெய்யப்பட்டனர்.

சட்டவிரோதமாக இலங்கையில் தங்கியிருந்த நைஜீரியர்கள் உள்ளிட்ட வெளிநாட்டவர்கள், சமூக ஊடகங்கள், இணையம் மற்றும் மின்னஞ்சல் முகவரிகளுக்கு தீங்கிழைக்கும் வகையிலான பல்வேறு குற்றச்சாட்டுக்காகவே கைதுசெய்யப்பட்டனர்.

இதேவேளை- குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளின் உதவியு டன் பொலிஸாரால் இதுபோன்ற விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என் றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (எ)

# பாடசாலை சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோக முயற்சி பொலிஸ் கான்ஸ்டபிள் கைது!

கொழும்பு, மார்ச்.08

பாடசாலைசிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்ற குற்றச்சாட்டில் நிலாவெளி பொலிஸ் நிலையத்துடன் இணைக்கப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

35 வயது பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

13 வயது சிறுமியின் தாயாரிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப் பாட்டின் அடிப்படையிலேயே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, இந்தப் பொலிஸ் கான்ஸ்டபிள் கைதுசெய்யப்பட்டார்.

அதேநேரம் சந்தேக நபர் சேவையிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட் டதுடன், இதுதொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (எ)

## இதுவும் நடந்தது!

சில நாட்களுக்கு முன்னர் இந்திய மாநிலமான திரிபுராவின் முதலமைச்சர் வெளியிட்ட கருத்து ஒன்று இலங்கையிலும் பேசுபொருளாகியிருந்தது.

இந்திய மத்திய அரசில் பிரதமர் மோடிக்கு அடுத்த நிலையில் இருப்பவர் அமித்ஷா. இந்திய உள்நாட்டலுவல்கள் அமைச்சரான அமித்ஷா மிகவும் பலம்பொருந்திய தலைவர்களில் ஒருவர்.

இலங்கையிலும் நேபாளத்திலும் பாதீய ஜனதா ஆட்சியை விஸ்தரிப்பதே தமது அடுத்த இலக்கு என்று அமித்ஷா தன்னிடம் தெரிவித்ததாக திரிபுரா முதலமைச்சர் தெரிவித்த கருத்துத்தான் இலங்கையிலும் பலரின் கவனத்தை ஈர்த்ததுடன், வழக்கம் போல சிங்கள கடும்போக்குவாதிகள் கண்டனக்குரல் எழுப்பவும் காரணமாகியது.

இந்தச் செய்தி வெளிவந்த மறுகணமே வழக்கம்போல இலங்கை சிவசேனை தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம், இது ஒன்றும் புதிய விடயமல்ல, இந்தியாவில் உள்ள கட்சிகளின் பெயரை இலங்கையில் பெயரைக்கி கட்சிகள் தொடங்குவது புதிய செய்தி அல்ல என்றார்.

இந்தியாவின் விடுதலை இயக்கமான இந்திய தேசிய காங்கிரசின் வெற்றிகரகமான செயலைப்பார்த்து கொழும்பில் சிங்களவரும் தமிழர்களும் இணைந்து உருவாக்கியது இலங்கைத் தேசிய காங்கிரஸ். அதில் தொடங்கி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உருவானது. அதேபோல மா.பொ.சிவஞானத்தின் தமிழரசு கழகத்தின் பெயரிலேயே செல்வநாயகம் தமிழரசுக்கட்சியைத் தொடங்கியதாக அப்போது கூறப்பட்டது என்றும் மறவன்புலவு சச்சிதானந்தம் விளக்கம் தந்தார்.

இந்தியாவில் உள்ள சிவசேன கட்சிக்கும் தனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று அடிக்கடி கூறிவருபவர் சச்சிதானந்தம். ஆனால் அவர் தனது அமைப்புக்கு (கட்சிக்கு) சிவசேன என்று பெயர் வைத்ததற்கு இந்திய சிவசேனவின் தாக்கம் தனக்குள் இருந்ததை தெளிவுபடுத்தவே இந்த விளக்கத்தை கொடுத்திருக்கலாம்.

இந்தச் சர்ச்சை ஓய்ந்திருந்த இந்த நேரத்தில்தான் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் ஊடகச் சந்திப்பை நடாத்திய மூவர், தம்மை இலங்கை பாரதீய ஜனதாக் கட்சியினர் என்று அறிமுகம் செய்திருந்தனர். தாம் ஆறு மாதங்களுக்கு முன்னரே இந்தக் கட்சியைத் தொடங்கிவிட்டதாகவும் அறிவித்த இவர்கள், தமது கட்சி அரசியலை முன்னிலைப்படுத்தாது என்றும் ஆனால் அந்த அரசியலுக்கு தமிழ்பேசும் மக்களை (முஸ்லிம்களையும் சேர்த்துத்தான் சொல்கிறார்கள்?) தயார் படுத்தும் அல்லது பக்குவப்படுத்தும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இவ்வளவுடன் நின்றிருந்தால் பரவாயில்லை. பாரதீய ஜனதா என்பதற்கு தமக்கு அர்த்தம் என்னவென்று தெரியாது என்று சொன்னவர்கள், பெயர் நன்றாக இருந்தது அதனால் அதனைத் தெரிவுசெய்தோம் என்றும் சொல்லியிருக்கின்றனர்.

கூகுள் மொழிபெயர்ப்பு செயலியில் போய் பார்த்திருந்தாலே பாரதிய ஜனதா கட்சி என்றால் பாரத மக்கள் கட்சி என்று தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்திருக்கும். அதாவது சிறிலங்கா பாரத மக்கள் கட்சியைத் தொடங்கியிருக்கிறார்கள் நம்மவர்கள். பாவம் தமிழ் மக்கள்.

**- ஊர்க்குருவி.**

# கொவெக்ஸ் திட்ட தடுப்பூசி இன்று முதல் வழங்கப்படும்

## இராஜாங்க அமைச்சர் தகவல்

கொழும்பு,மார்ச்.08

**கொவெக்ஸ் திட்டத்தின் கீழ், நேற்றுக் கிடைத்த தடுப்பூசி 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு இன்று முதல் வழங்கப்படவுள்ளது என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.**



உலக சுகாதார ஸ்தாபனத்தின் கொவெக்ஸ் திட்டத்தின் கீழ் நாட்டுக்கு வழங்கப்படும் 20 சதவீதமான தடுப்பூசிகள் நேற்று நாட்டை வந்தடைந்தன. 'கொவெக்ஸ்' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், சுகாதார அமைச்சுக்கு 14 இலட்சம் அஸ்ட்ராசெனேகா தடுப்பூசிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இரண்டு இலட்சத்து 64 ஆயிரம் தடுப்பூசிகள் நேற்று அதிகாலை இலங்கைக்கு கொண்டுவரப்பட்டன. தடுப்பூசியை இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே விமான நிலையத்தில் உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார். இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதேவேளை, கொரோனா வைரஸ் நோய்த் தாக்கம் அதிகமாகவுள்ள பிரதேசங்களில் 60 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு இந்தத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. தடுப்பூசியை ஏற்றும் பணி அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளது.

இந்தியாவின் மும்பையிலுள்ள சீரம் மருந்து உற்பத்தி நிறுவனத்தில் தயாரிக்கப்பட்ட இந்தத் தடுப்பூசிகள் நேற்று அதிகாலை, கட்டுநாயக்கா பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டன. (எ)

# சவால்மிக்க உலகில் பெண்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும்

## பிரதமர் மஹிந்த தெரிவிப்பு



கொழும்பு, மார்ச்.08

'சுபீட்சமான கொள்கை திட்டத்துக்கமைய பெண்களின் உரிமைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பெண்களுக்கு எதிரான வன்முறை, பாகுபாடு என்பவை வன்மையாக கண்டிக்கத்தக்கவை. அவள் ஒரு நாடு, ஒரு தேசம், ஒரு உலகம் எனும் தொனிப்பொருளில் கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்துக்கு வாழ்த்து தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

சவால்மிக்க உலகில் பெண்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும். வெற்றி தோல்வி கிட்டுவதும் நன்மை தீமை விளைவதும் உங்களது சொந்த எண்ணங்கள் மற்றும் செயல்பாட்டின் அடிப்படையிலாகும்' என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பிரதமர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தி வருமாறு:

உலகில் பெண்களின் உரிமைக்காக ஒரு தினம் கொண்டாடப்பட்டாலும் ஒவ்வொரு தருணமும் பெண்களின் உரிமைக்காக அர்ப்பணிக்க வேண்டும் என்பது எனது நிலைப்பாடாகும். ஒரு பெண் என்பவள் மகளாக, மனைவியாக, உலகின் உன்னத பதவியான தாயாக என்ற அனைத்து நிலைகளிலும் நிறைந்துள்ளாள். ஆகவே பெண்களுக்கு சமூகத்தில் உரிய அந்தஸ்த்து வழங்கப்பட வேண்டும்.

பொருளாதார ரீதியாகவும், சமூக அரசியல் ரீதியாகவும்,பெண்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும். சமுதாயத்தின் மிகச்சிறிய அலகான குடும்பத்தை பாதுகாக்க போராடும் பெண் இறுதியில் முழு நாட்டையும் பாதுகாக்க பங்களிப்பு செய்கிறார்.

பெண்கள் பல்வேறு காரணிகளை கொண்டு இன்று வரை பல சவால்களை எதிர்க் கொள்கிறார்கள். சவால் மிக்க இவ்வுலகில் பெண்கள் அனைவரும் விழிப்புடன் செயற்பட வேண்டும்.வெற்றி அல்லது தோல்வி கிட்டுவதும், நன்மை தீமை விளைவதும் உங்களின் சொந்த எண்ணங்கள் மற்றும் செயல்பாட்டின் அடிப்படையிலாகும்.

ஆகவே, சவாலை தெரிவு செய்யுமாறு அனைத்து பெண்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன். உங்களது சமூகத்தின் பங்களிப்பின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படும் நாட்டின் எதிர்காலம் மற்றும் அபிவிருத்தியடைந்த உலகை நோக்கி அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர் என்பதையும் நினைவுப்படுத்துகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# ஒரு நாடு பெண்களை நடத்தும் விதம் உண்மையான வளர்ச்சியின் குறிகாட்டி

## ஜனாதிபதி கோட்டாபய சுட்டிக்காட்டு



இலங்கை சமூகம் பெண்களையும் தாய், சகோதரி, மகள், மனைவி, மற்றும் என்ற அவர்களது பல்வகைப்பட்ட வகிபங்கையும் பண்டைய காலம் முதலே மிகுந்த கௌரவத்துடன் மதித்து வந்துள்ளது. ஒரு நாடு பெண்களை நடத்தும் விதம் அதன் உண்மையான வளர்ச்சியின் சமூக குறிகாட்டியாகும். இந்த விடயத்தில் இலங்கை ஏனைய பல நாடுகளுக்கு முன்மாதிரியாக திகழ்கிறது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

'பெண் என்பவள் எந்தவொரு சமூகத்திலும், அதனடிப்படை அலகாக விளங்கும் குடும்பக் கட்டமைப்பின் அடித்தளமாக விளங்குகின்றாள். தனது வாழ்நாள் முழுவதும் பல விதமான பாத்திரங்களை வகிக்கும் அவள், பல குடும்ப அலகுகள் இணைந்து உருவாகும் சமூகத்தை பிணைத்து வைத்திருப்பதில் ஒரு வலுவான பங்கை வகிக்கின்றாள். எப்போதும் பண அடிப்படையில் மதிப்பிடப்படாத போதும், தேசிய உற்பத்திக்கான அவளது பங்களிப்பு அதிக பெறுமதியுடையது என்பதை உறுதியாக கூறமுடியும். எனவே தான் பெண்களின் கண்ணியம், சமத்துவம் மற்றும் மகிழ்ச்சியைப் பாதுகாத்து போசிப்பது ஒரு சமூகப் பொறுப்பாகும்.

இன்று இலங்கையில் பொருளாதார, சமூக மற்றும் கலாசார வாழ்க்கையின் பல துறைகளில் பெண்கள் அதிக பிரதிநிதித்துவத்தைப் பெற்றுள்ளனர். இன்னும் பல துறைகளில் அவர்கள் ஆண்களுக்கு சவால் விடும் நிலையில் இருக்கின்றார்கள். இந்த வெற்றியானது பெண்ணின் அறிவாற்றல், தைரியம் மற்றும் அர்ப்பணிப்பைப் போன்றே எமது சமூகத்தின் சமூக நீதி மற்றும் முதிர்ச்சிக்கும் ஒரு எடுத்துக்காட்டாகும். அரசியல் துறையில் அவளது பங்கேற்பு இன்னும் அதிகரிக்கப்பட வேண்டும்.

'நாடும் தேசமும் உலகமும் அவளே' என்ற இந்த ஆண்டுக்கான சர்வதேச மகளிர் தின கருப்பொருள் காலத்துக்கேற்ற ஒரு கருப்பொருள் என நான் நினைக்கிறேன்.

சர்வதேச மகளிர் தினத்துடன் இணைந்து கொள்ளும் எமது நாட்டின் பெண்களுக்கு எனது ஆசீர்வாதங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

கல்வி tv
CHANNEL-1

காலை
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

பகல்
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 – 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள் (நேரலை)

இரவு
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள் (நேரலை)

ஈழநாடு
Eelanadu

# அமெரிக்காவால்கூட செப்ரெம்பர் 11 தாக்குதலை தடுக்க முடியவில்லை!

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன



கொழும்பு, மார்ச் 08

**"முன்கூட்டிய புலனாய்வு தகவல்கள் கிடைத்த போதும் அமெரிக்காவால்கூட செப்ரெம்பர் 11 தாக்குதலை தடுக்க முடியவில்லை" என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துக் கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். உயிர்த்த ஞாயிறு தொடர்பில் தன்மிது சுமத்தப்பட்ட பரிந்துரைகள் தொடர்பில் இதன்போது அவர் தெளிவு படுத்தினார்.

இலங்கை மாத்திரமில்லை ஏனைய உலகநாடுகளும் பயங்கரவாத தீவிரவாத அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றன எனவும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

"உலகின் மிகவும் வலிமை வாய்ந்த நாட்டினால் கூட அதன் பாதுகாப்பு தலைமையகமாக பென்டகனை பாதுகாக்க முடியவில்லை. இரண்டு வாரங்களுக்கு முன்னமே இந்த தாக்குதல் குறித்த தகவல் வெளியாகி இருந்தது. ஆனால், அமெரிக்க உளவுத்துறையால் அதைத் தடுக்க முடியவில்லை இதில் ஆயிரக்கணக்கான உயிர்களை காவு கொள் ளப்பட்டது" என்றும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்தார். தன் முன் உள்ள அனைத்து சவால்களுக்கும் தைரியமாக முகம் கொடுத்து முன்னோக்கி செல்வதே தனது எதிர்பார்ப்பு என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார்.

# எவ்வழியிலேனும் 1000 ரூபாவை அரசாங்கம் பெற்றுக்கொடுக்கும்

## அமைச்சர் நிமால் திடசங்கர்ப்பம்



கொழும்பு, மார்ச்.08

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான 1000 ரூபா சம்பளத்தை எந்தவழியிலாவது பெற்றுக்கொடுப்போம். இது தொடர்பில் பெருந்தோட்டத் தொழிற்சங்களுக்கும், பெருந்தோட்ட கம்பனி முதலாளிமார்களுக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்படாததன் காரணமாக, சம்பள நிர்ணய சபையுடன் கலந்துரையாடி அதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம் என தொழில்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்று முன்தினம் இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் 100 ஆவது ஆண்டு பூர்த்தி விழா இடம்பெற்றதுடன், இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# இரண்டு மாத குழந்தை கொரோனாவுக்கு பலி!

கொழும்பு,மார்ச்.08

கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட இரண்டு மாதங்களேயான குழந்தை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துது.

வெலிமடை பிரதேசத்தை சேர்ந்த இந்தக் குழந்தை கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் உயிரிழந்தது.

நோய் நிலைமை காரணமாக இந்தக் குழந்தை வெலிமடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குழந்தைக்கு நுரையீரல் பாதிப்பு ஏற்பட்டிருந்தது இனங்காணப்பட்டது.

பின்னர் வெலிமடை வைத்தியசாலையிலிருந்து பதுளை பொது வைத்தியசாலைக்கு குழந்தை மாற்றப்பட்ட நிலையில், குழந்தையின் இதயத்தில் நீர் நிறைந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

குழந்தைக்கு கொரோனா வைரஸ் தொற்றும் இதன்போது உறுதிப்படுத்தப்பட்டது. (எ)

# ஈழத் தமிழ் பெண்களுக்கு நீதியை வலியுறுத்தி ஜேர்மனியில் பேரணி




பெர்லின், மார்ச் 08

சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் ஜேர்மனின் தலைநகரில் நடைபெற்ற பேரணியில் தமிழ் பெண்கள் அமைப்பு மற்றும் தமிழ் இளையோர் அமைப்பு பிரதிநிதிகளும் கலந்து கொண்டு இலங்கைப் பெண்களுக்காக உரிமைக்குரல் எழுப்பினர்.

பெண்களின் சுதந்திரத்திற்காகவும் சுயநிர்ணயத்திற்காகவும் நடந்த பேரணியில் தமிழ் பெண்கள் அமைப்பின் சார்பில் இடம்பெற்ற உரையில், "இலங்கையில் தமிழ்ப் பெண்கள் இராணுவ ஒடுக்குமுறைக்கு உள்ளாகி வருகின்றனர் என்றும் சிங்களப் பேரினவாத அரசால் திட்டமிட்டுச் சிதைக்கப் படுகின்றனர்" எனவும் குற்றஞ்சாட்டப்பட்டது.

அத்துடன், போரில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகள், கணவனைத் தேடி நூற்றுக்கணக்கான தமிழ்ப்பெண்கள் பல வருடங்களாக வீதிகளில் போராடி வருகின்றார்கள் என்றும் கூறப்பட்டது.

இந்தப் பேரணியில் பல நாடுகளின் பெண்களும் பங்கேற்று ஈழத் தமிழ் பெண்களுக்காகக் குரல் எழுப்பினர். (ஐ)

# தீர்வின் பின்னரே மாகாண தேர்தல்

### தேர்தல்கள் ஆணைக்குழு விளக்கம்



கொழும்பு,மார்ச்.08

தற்போது நிலவும் சட்டரீதியான பிரச்னைகளுக்கு உரிய தீர்வு முன்வைக்கப்பட்டவுடன் மாகாண சபைத் தேர்தலை நடத்தத் திட்டமிட்டுள்ளோம் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

நிலவும் சட்ட ரீதியான பிரசனைகள் தொடர்பில் பாராளுமன்றத்துக்கும் சகல கட்சிகளுக்கும் தெரியப்படுத்தியிருப்பதாகவும் குறிப்பிட்டார். (எ)

# கூட்டு ஒப்பந்தம் ஊடாக 1000 ரூபா பிரச்னை தீராது

## திகாம்பரம் சொல்கிறார்



ஹற்றன்,மார்ச்.08

கூட்டு ஒப்பந்தத்தின் மூலமும், சம்பள நிர்ணய சபை ஊடாகவும் 1000 ரூபா பிரச்னை தீர்க்கப்படாது என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தோட்ட சபைத் தலைவர்களுக்கு இடையிலான சந்திப்பு நேற்று ஹற்றன் டீ.கே.டபிள்யூ மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

'தோட்டத் தொழிலாளர்கள் இன்று கூட்டு ஒப்பந்தத்தின் மூலமும், சம்பள நிர்ணய சபை ஊடாகவும் ஏமாற்றப்பட்டுள்ளனர். அரசாங்கம் 1000 ரூபா அதிகரிப்பு தொடர்பான வர்த்தமானியை வெளியிடவுள்ளது.

இந்நிலையில் 15 நாள்கள் மாத்திரமே வேலை வழங்கவுள்ளதாக கம்பனிகள் அறிவித்துள்ளன. 1000 ரூபா விடயத்தில் கம்பனிகள் நாடகமாடுவதாக நான் ஏற்கனவே கூறினேன். இப்போது அதுவே நடக்கின்றது. ஹோல்டன் தோட்டத்தில் இன்று வரை வேலை நிறுத்த போராட்டம் தொடர்கின்றது. போராட்டத்தின் விளைவாக ஹோல்டன் தோட்ட பெண்கள் கண்டி போஹம் பறை சிறையில் உள்ளனர்.

நான் நான்கரை வருட ஆட்சியில் எவரையும் சிறைக்கு அனுப்பவில்லை. துரைமாரை தாக்குமாறு எவருக்கும் சொல்லவில்லை. தீர்வு வழங்காத தலைவர்களே உள்ளனர். நான் சொன்னால் எவரும் கேட்பதில்லை. ஆனால், அவ்வாறானவர்கள் சொன்னால் மாத்திரம் மக்கள் கேட் கின்றனர். அவர்கள் காலங்காலமாக ஏமாற்றுகின்றனர். எவ்வளவு கூறினாலும் நம்மவர்களுக்கு புரிவதில்லை' என்றார். (எ)






# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் : திருமதி கோகிலா மகேந்திரன்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : சாதனைப் பெண்ணே-
மகளீர் தின சிறப்பு நிகழ்ச்சி




11.00 மணி : பாரதீ
**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : மகளீர் மட்டும்- மகளீர் தின சிறப்பு நிகழ்ச்சி



**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி-மகளீர் தின சிறப்பு நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்




9.00 மணி : சாட்சியம்
9.30 மணி : நலந்தானா-அகம் சுரக்கும் தொகுதி சிறப்பு வைத்தியர்-எம்.அரவிந்தன்
10.00 மணி : யாவரும் கேளீர்



**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)
**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே ( நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்ரஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள் (நேரலை)
**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள் (நேரலை)

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : சின்மய சிந்தனை
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : யாழ்ப்பாணம் வண்ணை பெருமாள் கோவில் திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் கோவில் தேர்த்திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : யாழ்ப்பாணம் வண்ணை பெருமாள் கோவில் திருவிழா

**காலை**
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : நசரேத்துார்மரியா திரைப்படம்
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.00 மணி : நிதர்சனம்
5.00 மணி : பாடல்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.03.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.